
# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, நவம்பர் 22, 2019 இதழ் – 84



**மீண்டும் சந்திக்கும் வரை...**

பக்கம் - 03

**அரங்கம்: ஒரு நண்பனை இழத்தல்**



பக்கம் - 05



**அரங்கத்தின் அரசியல் போக்கில் முரண்பாடு இருந்தாலும் அதன் தேவையை மறுக்கவில்லை**

பக்கம் -10



**படுவான்கரையின் அரங்காக இருந்து அரங்கம்!**

பக்கம் - 03



# மகிந்த பிரதமராகப் பதவியேற்பு - ரணில், சஜித் இருவரில் யார் எதிர்க்கட்சித் தலைவர்? - கட்சிக்குள் கடும்போட்டி

நி.அமிர்தலசன் ---

இலங்கை அரசின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தனது சகோதரர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு பிரதமர் பதவியை வழங்கியுள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் இன்று நண்பகல் ஒரு மணிக்கு பதவிப் பிரமாணம் நடைபெற்றது.

நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பதவியில் இருந்து விலகிய ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றியிருந்தனர். கோட்டாபஜ ராஜபக்ச அதிகாரபூர்வமாக பிரதமர் நியமனத்தை மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கினார்.

அதனையடுத்து இன்று பிற்பகல் மூன்று மணியளவில் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் தமது கடமைகளை மகிந்த ராஜபக்ச ஆரம்பித்தார். பதினைந்து பேர் கொண்ட புதிய அமைச்சரவை வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ளது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான பதினைந்து பேர் கொண்ட புதிய அமைச்சரவையோடு இடைக்கால அரசாங்கம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை செயற்படவுள்ளது. அதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

ஆறுமுகன் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் இதுவரை அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ள உப்பினர்களின் பெயர் விபரங்கள் எதுவுமே வெளியிடப்படவில்லை.

ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்களும் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். இன்று வெள்ளிக்கிழமை ஆறு மாகாணங்களுக்குப் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்குக் கிழக்கு

தொடர்ச்சி பக்கம் 15

# இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு




இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் புதனன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

'இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக வருகை தந்திருக்கும் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்டிருக்கும் அவரது அழைப்பை கௌரவத்துடன் ஏற்றுக்கொண்டேன். அத்தோடு இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை பலப்படுத்தவும், பிராந்திய பாதுகாப்பு, அமைதி மற்றும் பொருளாதார

தொடர்ச்சி பக்கம் 02

# டிசம்பர் 2 இல் சாதாரண தர பரீட்சைகள்



கல்வி பொது சாதாரண தர பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை பரீட்சையை முன்னிட்டு விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பி.சனத் புஜித்த தெரிவித்துள்ளார்.

அதன்படி, 4,987 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. 554 இணைப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இரத்மலானை, தங்காலை, மாத்தறை, சிலாபம், கொழும்பு மெகசின்

தொடர்ச்சி பக்கம் 02

## அந்தரவிடுதியிலும் அரங்கம்!



(காரைதீவு சகா)

கடந்த 470 நாட்களாக வாழ்விடத்துக்காகப் போராடிவரும் பொத்துவில் 60ஆம்கட்டை கனகர் கிராம தமிழ்மக்கள், தமது செய்திகள் அரங்கத்தின் முதல்பக்கத்தில் வந்துள்ளதை போராட்ட கொட்டிலில் இருந்து மிகவும் ஆர்வத்துடன் பார்வையிடுவதைக்காணலாம்

## கிழக்கில் கலைபண்பாட்டு ஆலோசனைக்குழு உதயம்!



காரைதீவு சகா)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழியங்கும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முதற்தடவையாக கலை பண்பாட்டு ஆலோசனைக்குழு ஒன்றை அமைக்க திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அது தொடர்பாக அவர் கூறுகையில்:
எமது திணைக்களம் கிழக்கில் வாழும் மூவின மக்களின் கலை பண்பாட்டு விழுமியங்களை பேணுதல் ஆற்றுகைப்படுத்தல் ஆவணப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுவருவதை அறிவீர்கள்.

இத்தகைய செயற்பாடுகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் நடைமுறைப்படுத்த ஏதுவாக ஆலோசனைகளை வழங்கவென மாகாணத்திலுள்ள துறைசார் அறிஞர்களை உள்ளடக்கி ஆலோசனைக்குழுவொன்றை உருவாக்க உத்தேசித்துள்ளேன்.

அக்குழுவில் உள்ளீர்க்க உத்தேசித்துள்ள அறிஞப்பெருமக்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கிவருகிறேன். வெகுவிரைவில் அவர்களை அழைத்து முதற்கட்ட அங்குரார்ப்பண நிகழ்வொன்றை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## மூன்றாம் தவணைப் பரீட்சை முடிந்தகையோடு மாணவருக்கு தேர்ச்சி அறிக்கை கட்டாயம் வழங்கப்படவேண்டும்! கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் மன்சூர் அறிவுறுத்தல்.



காரைதீவு நிருபர் சகா

பரீட்சைகளை நேரகாலத்துடன் பூர்த்திசெய்து 3ஆம் தவணை விடுமுறைக்கு முன்பாக விடைத்தாள்களை மாணவர்களுக்கு விளக்கமளித்து அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அத்துடன் மாணவர் அடைவுமுன்னேற்ற அறிக்கையையும் ஒப்படைக்கவேண்டும் என கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் அதிபர்களையும் கேட்டுள்ளார்.

வரலாற்றில் முதற்தடவையாக கிழக்கு மாகாணத்தில் மூன்றாந்தவணைப் பரீட்சை வழமைக்குமாறாக பாடசாலை மட்டத்தில் நடைபெற்று வருகிறது.

ஜனாதிபதிதேர்தலையொட்டி இப்பரீட்சைகள் முன்கூட்டியே நடைபெற ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்குது.

அவர் மேலும் கூறுகையில்:

இம்முறை பொதுவானதொரு காலஅட்டவணை மாகாணத்திற்கோ வலயத்திற்கோ இருக்கப்போவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அந்தந்தந்த பாடசாலை தமக்கேற்றால்போல கால அட்டவணையைத் தயாரித்து பரீட்சையை நடாத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

அதற்கான அறிவுறுத்தல்களை 17 கல்விவலயங்களின் வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் அவர்களுடாக சகல அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் அதாவது விடுமுறைக்காக மாணவர்கள் வீடுசெல்லும் போது விடைத்தாள்கள்மற்றும் மாணவர் முன்னேற்ற அறிக்கை அவர்கள் கையிலிருக்கவேண்டும்.

## பாணின் விலை குறைப்பு



பாணியின் விலை உடன் அமுலுக்கு வரும் வகையில் 5 ரூபாவால் மீண்டும் குறைக்கப்படுவதாக அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலையைக் குறைப்பதாக கோதுமை மா நிறுவனங்கள் எழுத்து மூலம் அறிவித்துள்ளதை தொடர்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார். கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலையை 5 ரூபாவால் தற்காலிகமாக அதிகரிக்க திர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## டிசம்பர் 2...

சிறைச்சாலை, மாறகம அபேக்ஷா வைத்தியசாலை, வடரெக சனித்தா வித்தியாலயம், நேபாளம் காத்மண்டு நகரத்தில் உள்ள இலங்கை தூதரக அலுவலகம் ஆகிய இடங்களில் இந்த விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இம்முறை பரீட்சைக்கு 4 இலட்சத்து 33 ஆயிரத்து 50 பாடசாலை பரீட்சாத்திகள் தோற்றவுள்ளர். தனியார் பரிட்சாத்திகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 83 ஆயிரத்து 958 ஆகும். மொத்த பரீட்சாத்திகளின் எண்ணிக்கை 7 இலட்சத்து 17 ஆயிரத்து எட்டு ஆகும்.

தொடர்ச்சி...

## இந்திய....

அபிவிருத்தி ஆகிய முக்கிய அம்சங்கள் குறித்து கலந்துரையாடவும் எதிர்பார்த்துள்ளேன்' என்று ஜனாதிபதி தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்திரக்கின்றார்.

'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒரு சுமூகமான சந்திப்பை மேற்கொண்டேன். அமைதி, முன்னேற்றம், சுபீட்சம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் இணைந்து பணியாற்றுவதற்கான பிரதமர் நரேந்திர மோடியின் செய்தியை அவரிடம் தெரிவித்தேன். அவரது தலைமைத்துவத்தின் கீழ் இந்திய இலங்கை உறவுகள் சிறந்த உச்சத்தை அடையுமென்று நம்புகின்றேன்' என இச்சந்திப்பு தொடர்பாக கலாநிதி ஜெய்சங்கர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.
(அரச தகவல் திணைக்களம்)

## தீபாவளி கிரிக்கட் போட்டி



காரைதீவு விளையாட்டுக்கழகம் தீபாவளியை முன்னிட்டு நடாத்திய ஜூனியர் பிரிமியர் லீக் கிரிக்கட்ட சுற்றுப்போட்டிகாரைதீவு விபுலாநந்தா மைதானத்தில் கழகத்தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் நடைபெற்றது. இம்முறை மழை காரணமாக பிற்போடப்பட்ட கிரிக்கெட் போட்டிகள் நேற்று மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று அதற்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. அதன்போதான காட்சிகள் இவை.

## சஜித் கூட்டம்



ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற புதிய ஜனநாயக முன்னியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச இன்று (21) முற்பகல் தனது ஆதரவாளர்களை சந்தித்தார்.

இதன்போது, ஜனாதிபதி தேர்தலில் தனக்கு ஆதரவளித்த தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களுடன் எதிர்கால செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வை சிறிகோத்த கட்சித் தலைமையகத்தில் வியாழனன்று முற்பகல் 11.00 மணியளவில் நடாத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், புதனன்று பிற்பகல் விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்ட கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் அந்த நிகழ்வு இடம்பெறாது என குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், கொழும்பில் அமைந்துள்ள பிரதான கட்சி காரியாலயம் ஒன்றில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும் சந்திக்கும் வரை...

அரங்கம் செய்திகள்
0094 71 399 909 1
www.arangamnews.com
www.facebook.com/arangamltd/

ஐம்பதுகளின் இறுதி மற்றும் அறுபதுகளின் ஆரம்பத்தில் என்று நினைக்கிறேன், அப்போது, “மட்டக்களப்பு அபிவிருத்திக் கழகம்” என்னும் பெயரில் ஒரு அமைப்பு மட்டக்களப்பு மக்களின் நலனை மனதில் கொண்டு இயங்கியது.

தேர்தல் அரசியலில் இருந்து விலகி, பெரிதும் மட்டக்களப்பின் அபிவிருத்தி என்பதை முக்கியமாகக் கொண்டு அந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகர் எனது தந்தையான நல்லையா உடையார் பூபாலரட்ணம். (இங்கு “உடையார்” சாதிப் பெயரல்ல, எனது பாட்டனாரின் அரச பதவிப் பெயர் மாத்திரம்). அந்த அமைப்பின் பொதுச்செயலாளரும் அவரே. அந்த அமைப்பு தன்னால் முடிந்தவரை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சில நல்ல விடயங்களை செய்து முடித்திருந்தது. எனக்கு அது குறித்த போதிய அறிவு இல்லை, இன்று அதனை விபரிக்க.

ஆனால், அன்றும் அந்த அமைப்பும் ஏதோ தேர்தலை நோக்கி இயங்குவதான விமர்சனம் இருந்தது. அது பிரச்சினையில்லை, ஆனால், அந்த அமைப்பாலும் தொடர்ந்து இயங்க முடியாமல் போய்விட்டது. நிலைமைகள் மாறிவிட்டன.

ஆனால், எனக்கு எனது தந்தை சொன்ன ஒரே விடயம், ‘நீ எப்படி வந்தாலும் என்னவாக வந்தாலும் ஊரை மறந்துவிடாதே. ஏதாவது அதற்கு செய்தாக வேண்டும்’ என்பதாகும். அவர், அவரது மூன்று பெண் பிள்ளைகளுக்கும் ஏதும் பெரிதாக சேர்த்து வைக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு ஒழுங்கான இடத்தில் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று என்னிடம் ஒருநாளும் கேட்டதில்லை. அவர் சொன்ன ஒரே விடயம், ‘ஊருக்கு ஏதாவது செய்துவிடு’ என்பது மட்டுமே. அதற்காக எனது அம்மாவின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டதே “அரங்கம்”.

நான் இவ்வளவு காலமும் கடந்த பின்னரும் ஊருக்கு ஏதும் செய்யவில்லை என்ற மனக்குறையுடன் வாழ்ந்தது உண்மை. இடையில் இருந்த நிலவரங்களால் நாடு கடந்தும் வாழ்ந்தேன். அதுவும் ஒரு அரைக்காரணம். ஆனால், 50 வயது கடந்த பின்னர், இனியும் தவறவிட்டால் ஏதும் முடியாமல் போய்விடும் என்ற நிலையில்தான் மட்டக்களப்பு வந்து ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தேன்.

பதவி விலகியதற்காக எனக்கு பிபிசி நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட ஓய்வுகாலத்துக்கான அனைத்துப் பணம், எனது மகன்மார் உழைத்துக் கொடுத்த பணம் ஆகியவற்றை கொண்டுவந்து அங்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் அங்கு வந்தேன்.

அதற்கேற்ப கிழக்கு மாகாணத்தின் நிலவரமும் போரின் பின்னர் மிகவும் மோசமாக இருந்தது. நாடு கடந்து வாழும் தமிழரின் உதவிகளும் அதற்கு தேவைப்பட்டன.

சரி, என்ன செய்வது என்ற கேள்வி எழுந்த போது என் முன்பாக பல தெரிவிகள் இருந்தன. அதில் ஒன்று அரசியலில் இறங்குவது. ஆனால், அது எனக்கான தெரிவல்ல என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அதேவேளை, ஊடகத்துறையில் நான் பெரிய நிபுணன் அல்ல என்றாலும், சில தசாப்தங்கள் அதில் சிறிய அனுபவத்தை பெற்றிருந்தேன். ஆகவே அதனை எனது ஊருக்கு பயன்படுத்துவது என்று முடிவு செய்தேன். அதற்கான ஒரு தேவையும் அங்கு இருந்தது. அதனால்தான் ஊடகத்துறையின் ஊடாக ஒரு பத்திரிகையை தொடங்கி, அதன் ஊடாக மட்டக்களப்பு தமிழகத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம், பொருளாதாரம், அரசியல் என அனைத்து விடயங்களிலும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவது என முடிவு செய்தேன்.

எனது ஊரவனின் பலம் பலவீனங்களை உணர்ந்து அதற்கேற்ப செயற்பட விளைந்தேன். காசு கொடுத்து பத்திரிகை வாங்கிப் படிக்கும் போக்கு கிழக்கில் மிகவும் குறைவாக இருந்தது. அது எனது ஊரவனின் பலவீனம். அதனை விமர்சித்துக்கொண்டிருப்பது எனது நோக்கமல்ல. மாறாக இலவசமாக பத்திரிகையை முடிந்தவரை விநியோகித்தேன். அது நல்ல பலனைத் தந்தது. பலர் வாசித்தனர்.

மைய நீரோட்டப் பத்திரிகைகள், குறிப்பாக மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசம் மற்றும் வாகரைப் பிரதேசம் போன்ற பகுதிகளில் பத்திரிகைகளை உரிய வகையில் விநியோகிப்பது கிடையாது. அங்கு நான் இலவசமாக விநியோகித்தேன்.

கிழக்கின் பேசப்படாத பிரச்சினைகளைப் பேச அரங்கத்தில் இடமளித்தேன். அதற்காக விமர்சிக்கப்பட்டேன். அது குறித்து எந்தவிதமான கவலையும் எனக்குக் கிடையாது.

பேரினவாதிகளுக்கு எனது பத்திரிகை வக்காலத்து வாங்குவதாகவும் நான் தேர்தல் அரசியலுக்குள் நுழைவதற்கான முன்னேற்பாடுதான் இந்த இலவசப் பத்திரிகை என்றும் விமர்சனங்கள் எவ்வித ஆதாரம் இன்றி முன்வைக்கப்பட்டன. இப்போது எனது நிலை விளங்கியிருக்கும் என்று நினைக்கிறேன். இனியும் விளங்காமல் இருப்பவர்களை என்னால் எதுவும் செய்ய இயலாது. அவர்கள் விளங்காததுபோல் நடிப்பவர்கள்.

## சீவகன் பூபாலரட்ணம்

பத்திரிகையை நடத்தும் ஒருவர் தேர்தல் அரசியலில் இருப்பது நடுநிலையான ஊடகத்தை நடத்துவதில் தவறிழைத்துவிடும் என்று கருதுபவன் நான். அதனால், பத்திரிகை நடத்துவது என்று முடிவெடுத்த பின்னர் தேர்தல் அரசியலில் நுழைவதில்லை என்று முடிவோடுதான் பத்திரிகையை ஆரம்பித்தேன். ஆனால், என்நோக்கத்தை சிலர் கடைசிவரை புரிந்துகொள்ளவில்லை. இனியாவது புரிந்துகொள்ளட்டும்.

இந்த ஊடகத்தை நடத்துவதில் பலர் எனக்கு உதவியிருக்கிறார்கள். இதற்கான நிதியுதவியை பலர் செய்திருக்கிறார்கள். இவர்களில் பலர் எனது நண்பர்கள் அல்லது உறவினர்கள். நிதியுதவிகள் விளம்பரமாக வந்திருக்கின்றன அல்லது பக்க அனுசரணைகளாக வந்திருக்கின்றன. ஆசியா பவுண்டேசன், ட்ரான்பரன்ஸி இண்டர்நாஷனல், லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயம் மற்றும் லண்டன் என்.சி.எல் கல்வி நிறுவனம் ஆகியவற்றை தவிர ஏனைய நிதியுதவியாளர்கள் எனக்கு நேரடியாகத் தெரிந்த உறவினர்கள் மற்றும் நண்பர்களே. இதனைவிட லண்டனில் இயங்கும் சில மட்டக்களப்பு சார்ந்த அமைப்புக்களும் உதவியுள்ளன. அவர்களின் உதவிகள் அனைத்தும் வெளிப்படையானவை. கிழக்கின் மீதும் எனது முயற்சிகள் மீதும் கொண்ட அக்கறையில் வந்தவை அவை. எவரையும் தவற விட்டுவிடுவேன் என்ற காரணத்தால் எவரது பெயரையும் நான் இங்கு குறிப்பிடவில்லை. நண்பர்கள் மன்னிக்கவும்.

இந்தப் பத்திரிகையில் ஆக்கங்களை எழுதிய அனைவரும் கிழக்கின் விருத்தியில் அக்கறை கொண்டவர்கள் அல்லது ஊடகத்துறையில் அக்கறை கொண்டவர்களே. இவர்கள் செய்த உதவியை என்றும் நான் மறவேன். கட்டுரைகளைப் பெறுவதற்காக இவர்களை கிட்டத்தட்ட நான் வருத்தியிருக்கிறேன். ஆனாலும் எவரும் இன்றுவரை முகம் சுழியாது எழுதி வந்தனர்.

சிலர் துறைசார் நிபுணர்கள் அல்லது மூத்த எழுத்தாளர்கள். இவர்கள் அரங்கத்தை வழி நடத்தியவர்கள். இவர்களை விட அரங்கத்தால் உருவாக்கப்பட்ட அல்லது பயிற்றுவிக்கப்பட்ட சில எழுத்தாளர்களையும் இங்கு நான் விட்டுச் செல்கிறேன். நாளைய கிழக்கு இவர்கள் கையில். அதில் எனக்கு நிறைய திருப்தி. இவர்களையிட்டு திமிருடன் கூடிய பெருமை எனக்கு இருக்கிறது.

ஒப்பீட்டளவில் “அரங்கம்” பிரசுரமானது சிறிய காலந்தான். அது போட்டது வெறுமனே ஒரு ஒற்றையடிப்பாதைதான் என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரியும். ஆனால், காலம் நிச்சயமாக அதனை எனது கிழக்கு மக்களுக்கான இராஜபாட்டையாக மாற்றும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அரச அதிகாரிகள், ஊழியர்கள், சமூகத்தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என பல தரப்பினரும் அரங்கம் பிரசுரமாக வந்து விநியோகிக்கப்படுவதில் பெரும் உதவி செய்திருக்கிறார்கள். அனைவருக்கும் எனது நன்றிகள்.

இதனைவிட இணையத்தில் அரங்கம் தொடரும். அரங்கத்தின் ஆவணப்படுத்தல் நடவடிக்கைகள் தொடரும். (இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்முறைகள் குறித்த 13 சம்பவங்கள் பற்றிய வீடியோ ஆவணம் பூர்த்தியாகியுள்ளது. படிப்படியாக அது தரவேற்றம் செய்யப்படும்.) மட்டக்களப்பு குறித்த ஆவணப்படங்களின் உருவாக்கம் தொடரும். ஊடகப் பயிற்சிகளும் தொடரும்.

அரங்கத்தால் மட்டக்களப்பில் நடத்தப்படும் கல்வி உதவிகள் தொடரும். பன்சேனை பாரி வித்தியாலய பெண்கள் கால்பந்து அணிக்கான அனுசரணையும் தொடரும்.

நான் ஓடிய தூரம் குறுந்தூரந்தான். ஆனால், அதனை வேகமாக ஓடியிருக்கிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கிறது. ஒரு மண்ணின் மைந்தர்கள் வீழ்ந்து எழும்போது என்னால் செய்யக்கூடிய உதவிகளை செய்து முடித்திருக்கிறேன்.


அப்பா சொன்னதை என்னால் முடிந்தவரை செய்து முடித்த திருப்தி எனக்கு இருக்கிறது. ஆனால், போராட்டத்தில் இடைவழியில் விலகிச் செல்வது போன்ற உணர்வை தவிர்க்க முடியவில்லை.

முடிந்தால் மீண்டும் சந்திக்கும் வரை...

அன்புடன்

சீவகன் பூபாலரட்ணம்




பக்கவடிவமைப்பு : டெரி றோஜஸ் லியோண்
லாவண்யா லியோண்

# 'அரங்கம்' பத்திரிகை பதித்த தடங்கள்

தமிழ்த் தேசியப் போராட்டத்தின் தோல்விக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் தமிழர்களின் நுண் அரசியலை போராட்டத் தலைமைகள் காணத்தவறியமையும் ஒரு காரணமாகும். அவற்றை வெளிப்படுத்தி போராட்டத் தலைவர்களை நெறிப்படுத்தக் கூடிய ஊடகங்களும் தமிழர்களிடத்தில் இல்லை அல்லது இல்லாமலாக்கப்பட்டு விட்டது. இருந்த ஊடகங்கள் எல்லாம் வெகுசன அரசியல் பேசிய ஊடகங்களும் புகழ்பாடிய ஊடகங்களுமே தவிர நுண் அரசியல் பேசிய ஊடகங்கள் அல்ல. போர் ஓய்ந்த பின்பு தமிழர்களின் நுண் அரசியலைப் பற்றிப் பேசுவதற்கான சனநாயக சமூக வெளி கிடைத்திருந்த போதும் ஊடகங்கள் அவற்றை தமது நலன் கருதி தவிர்த்து வந்துள்ளன. இந்த நிலையில் 'அரங்கம்' பத்திரிகை

**எழுவான் வேலன்**

தமிழர்களின் நுண் அரசியலை மிகத் துணிவுடன் வெளிப்படுத்திக் கொண்டிருந்த பத்திரிகையாக இருக்கின்றது. அது பலருக்கு கசப்பானதாக இருந்த போதிலும் அதனைப் பற்றிப் பொருட்படுத்தாது பேச வேண்டியதை பேசியே வந்துள்ளதை அவதானிக்கலாம். இது அரங்கம் பத்திரிகையின் சிறப்பான அம்சமாகும்.

நான் பல பத்தி எழுத்துக்களில் சுட்டிக்காட்டியது போன்று கிழக்கு மக்களின் அரசியலைத் தீர்மானிக்கின்ற கருத்தியலாக யாழ் மேலாதிக்கவாத கருத்து நிலையே விளங்கி வருகின்றது. 'அரங்கம்' பத்திரிகை இந்த மேலாதிக்க கருத்தியலை கேள்வி கேட்டு புறமொதுக்கி கிழக்குக்கான ஒரு கருத்தியல் தளத்தினை உருவாக்குவதற்கான ஒரு தளமாக இருந்து வந்துள்ளதை அதன் வாசகர்கள் உணர்வார்கள். ஆயினும் இந்தக் கருத்துநிலை இன்னும் பெருமளவான மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கப்படாமலே உள்ளது. பல சகாப்தங்களாக மேலாதிக்கவாதிகளால் கட்டமைக்கப்பட்டு மக்களின் நாடி நரம்புகளில் ஊறிப்போன அந்தக் கருத்துநிலைப் படிமங்களை களைந்து புதியதொரு கருத்துநிலைப் படிமத்தை உருவாக்குவதற்கு நீண்டகால உழைப்பும் தொடர்ச்சியான ஈடுபாடும் அவசியமாகும். இருந்த போதிலும் அரங்கம் அவ்வாறான தேவையினையும் சிந்தனைக்கிளர்ச்சியையும் ஏற்படுத்தியிருப்பது முக்கியமான விடயமாகும்.

மட்டக்களப்பில் 1990களுக்குப் பின்னர் 'விடிவானம்', 'தினக்கதிர்' போன்ற பத்திரிகைகள் வெளிவந்து நின்று போயின. அப்பத்திரிகைகளுக்கில்லாத முக்கியத்துவம் 'அரங்கம் பத்திரிகைக்கு இருக்கின்றது. அதாவது தற்போது தமிழர்களின் அச்சு ஊடகங்கள் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் அடிப்படையாகக் கொண்டே வெளிவரும் சூழலில் இவற்றினால் மறைக்கப்படும் அல்லது கவனத்தில் கொள்ளாது விடப்படும் கிழக்குத் தொடர்பான விடயங்களும் பொதுவெளிக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்ற ஊடக அறத்தின் மீதுள்ள கோபமே, சீவகன் அவர்களை மட்டக்களப்பில் 'அரங்கம்' என்றொரு பத்திரிகையை தனது சொந்தச் செலவில் இலவசமாக வெளிக்கொண்டு வருவதற்கு காரணமாய் அமைந்திருக்கின்றது என்பதை 'அரங்கம்' வெளிப்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

மட்டக்களப்புச் சமூகம் ஒரு வாசிக்கும் சமூகமாக இல்லாததன் காரணத்தினால் அதனை இலவசமாக வழங்கி சமூகத்தின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கலாம் என்ற சமூக அக்கறையும் இலவசமான வழங்கலுக்குள் இருக்கின்றது.

ஊடக தர்மம் என்பது எல்லா மக்களினுடைய கருத்துகளுக்கும் மதிப்பளித்து அவர்களுடைய கருத்துச் சுதந்திரத்தை மதிப்பவையாக இருத்தல் வேண்டும். ஆனால் துரதிஸ்ட வசமாக கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும் அச்சு ஊடகங்களில் இந்தத் தர்மத்தைக் காணமுடியாதுள்ளது. ஒவ்வொரு ஊடகங்களும் தங்களுக்கான அரசியல் நிலைப்பாட்டுடன் அந்த அரசியல் நிலைப்பாட்டுக்கு பங்கம் ஏற்படாத வகையிலே செயற்படுகின்றன. தங்களுடைய அரசியலுக்கு பங்கம் ஏற்படுத்தும் கட்டுரைகளை பிரசுரியாமல் ஒதுக்கி விடுவதிலிருந்து தங்களுக்கு ஏற்ற வண்ணம் தலைப்பை மாற்றி, உள்ளடக்கத்தை வெட்டித் திருத்தி சீர்செய்து அதன் பின்பே பிரசுரிக்கின்றனர். இவ்வாறான ஊடகங்கள் எல்லாம் தங்கள் அரசியலுக்கு உகந்த விதத்தில் கட்டுரைகள் வரவேண்டும் எனச் சிந்திக்கிறார்களே தவிர மக்களுக்குத் தேவையான விடயங்கள் அல்லது தங்களுடைய வெகுசனத் தன்மைக்கு மாற்றான கருத்துக்களும் இருக்கின்றன என்பதை கவனத்தில் கொண்டு செயற்படுவது கிடையாது.

இந்தப் பொதுப்பண்பிற்கு மாறாகச் செயற்படும் ஊடகங்களை மாற்று ஊடகங்கள் என அழைக்கின்றோம். ஊடக அறமும் நேர்மையும் கொண்ட ஊடகவியலாளர்கள் இவ்வாறான மாற்று ஊடகங்களில்த்தான் மனநிறைவு அடைகின்றனர். அதேபோல் காத்திரமான சிந்தனைகளைக் கொண்டிருக்கும் வாசகர்களும்



இவ்வாறான மாற்றுப் பத்திரிகைகளை விரும்பி வாசிக்கின்றனர். தமிழில் 'சரிநிகர்' இவ்வாறான ஒரு மாற்று ஊடகமாக காத்திரமாகச் செயற்பட்டிருந்ததை எவரும் மறுப்பதற்கில்லை. அதன் பின்பு அரங்கம் பத்திரிகையினைத்தான் குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது.

அரங்கம் தேசிய ரீதியாக ஒரு மாற்றுப் பத்திரிகையாக இல்லாவிட்டாலும் கூட கிழக்குப் பிரதேசத்தின் தேவைகளையும் பிரச்சினைகளையும் மிகத் தைரியத்துடன் வெளிக்கொண்டு வந்த ஒரு மாற்றுப் பத்திரிகையாக இருப்பதை எவரும் மறுக்க முடியாது. இதில் அதன் ஆசிரியர் திரு.சீவகன் அவர்கள் மிகக் கறாராக தனது ஊடக அறத்தினைப் பேணிவந்துள்ளதை பத்திரிகையின் கருத்தாடல்களும் பத்திரிகை ஆசிரியரது எழுத்துக்களும் வெளிப்படுத்தி வந்துள்ளதை அதன் வாசகர்கள் நன்கு அறிவர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர் ஒருவருடைய கருத்தை வெளியிட்டு அந்தக் கருத்துக்கு மாற்றான மற்றவருடைய கருத்தை வெளியிடாது மறைத்தவர் அல்ல. அதேபோன்று இக்கட்டான நிலைமைகளின் போது எவ்வித பக்கச்சார்பும் இன்றி மக்கள் எவ்வாறு மனிதாபிமான ரீதியாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் எவ்வாறான அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் எவ்வித சந்தர்ப்பவாதமும் இன்றிக் கூறிவந்துள்ளார். பத்திரிகையின் அரசியல் பத்தி எழுத்துக்கள் கூட மற்றவர்களுடைய கருத்தக்களை வேண்டி நிற்பவைகளாகவும் தொடர் உரையாடலுக்கு உரியவைகளாகவுமே அமைந்திருக்கின்றன. ஆனால் தமிழ் சமூகம் விமர்சனம், அரசியல் உரையாடல் என்பவற்றில் மூடுண்டதாகவும் மேலாதிக்க கருத்தியல் சார்ந்ததாகவும் காணப்படுவதால் உரையாடலுக்கான ஆரம்ப எழுத்தக்களே இறுதி எழுத்துக்களாகவும் அமைந்து விடுகின்றன. அல்லது எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலே இல்லாமல் கேள்விகளாகவே இருந்து விடுகின்றன.

இதற்குக் காரணம் இதுவரைகாலமும் எமது ஊடகங்கள் வளர்த்தெடுத்த போலித்தனமான கற்பனாவாதிகளான அரசியல், சமூக செய்ற்பாட்டாளர்களினால் யதார்த்தத்தில் வேர்கொண்டு உறுதியாக எழும் கேள்விகளை எதிர்கொள்வதற்கு முடியாமல் இருப்பதேயாகும். அந்தவகையில் அரங்கம் பத்திரிகை போலி வேசதாரிகளுக்கு ஓர் அச்சமூட்டும் ஊடகமாகவே தொழிற்பட்டிருக்கின்றது.

திரு.சீவகன் அவர்கள் அரங்கம் பத்திரிகையின் முக்கியமான பத்தி எழுத்துக்களை தனது முகநூலில் பதிவிடுவதன் மூலம் அந்த எழுத்துக்களை சமூக ஊடகங்களில் பேசுபொருளாக மாற்றிவிடுகின்றார். ஒரு எழுத்து அச்சு ஊடகத்தில் வெளிவரும் போது அது பற்றிய பின்னூட்டல்கள் அல்லது விமர்சனங்களை உடனடியாகப் பெறமுடியாது. ஆனால் முகநூல் அவ்வாறானதல்ல. முகநூல் வாசகன் சரி, தவறு என்ற எந்தவித அளவுகோலுமின்றி தனக்குத் தெரிந்ததை தனக்குச் சரி எனப்படுவதை உடனுக்குடன் பதிவிட்டு விடுகிறான். அவற்றை ஏற்றுக் கொண்டு அவற்றுக்கு பதிலளிப்பதற்கும் தொடர்ந்து அவ்வாறான உரையாடல்களை வளர்த்தெடுப்பதற்கும் மிகப் பொறுமையும் பக்குவமும் தேவையாகும். இவை எல்லாவற்றையும் சீவகன் எதிர்கொண்டு கோவப்படாமல் நடுநிலைமையோடு நிதானமாக கையாண்டிருப்பதை அவருடைய முகநூலில் கண்டு கொள்ளலாம். இது ஏனைய ஊடகவியலாளர்கள் சந்திக்காத அனுபவம் என்றே கருதுகின்றேன். சில முகநூல் நண்பர்கள் தங்களது முகநூலில் பதிவிடும் கருத்துக்களை விமர்ச்சிப்பதற்கு அல்லது அந்தக் கருத்துகளுக்கு மாற்றான எனது கருத்துக்களைக் பதிவிட்டமைக்காக என்னை தங்களுடைய நண்பர்கள் பட்டியலில் இருந்து நீக்கியவர்களும் உள்ளனர். அவ்வாறானவர்களிடம் ஆயுதமும் அதிகாரமும் இருந்தால் என்னை தங்களது நண்பர்கள் பட்டியலில் இருந்து நீக்குவதற்குப் பதிலாக நிரந்தரமாக தீர்த்துக் கட்டியிருப்பார்கள் எனக் கருதுவதுண்டு. இவ்வாறுதான் நாம் மற்றவர்களின் கருத்தச் சுதந்திரத்தை மதிப்பவர்களாக வளர்க்கப்பட்டிருக்கின்றோம் என்பது வேதனையான விடயமாகும். இவ்வாறு வன்மம் நிறைந்த கருத்ததிகாரம் மிக்க சூழலில் மாற்றுப் பத்திரிகை ஒன்றினை வெளியிடுவது ஆபத்தானதும் சவாலானதுமாக இருந்த போதிலும் சீவகன் அந்த ஆபத்தையும் சவாலையும் எதிர்கொண்டு அரங்கம் பத்திரிகையினை வெளிக்கொண்டு வந்துள்ளமை பாராட்டுதற்குரியதும் பத்திரிகையாளர்களுக்கு முன்மாதிரியானதுமான ஒன்றாகும்.

எனவே ஒட்டுமொத்தமாக கிழக்கின் பல்லினச் சூழலை பேணிப்பாதுகாத்து இந்தச் சமூகத்தின் தேவைகளையும் பிரச்சினைகளையும் எண்ணங்களையும் மற்றவர்களுக்கும் எடுத்துச் சென்ற ஒரு பத்திரிகையான 'அரங்கம்' தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் வெளிவந்து மேற்குறிப்பிடப்பட்ட அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உழைக்க வேண்டும் என்பது இந்தச் சமூக நாட்டமுள்ள ஒரு வாசகன் என்ற வகையில் எனது கோரிக்கையாகும்.

# அரங்கத்தின் அரசியல் போக்கில் முரண்பாடு இருந்தாலும் அதன் தேவையை மறுக்கவில்லை

1890ஆம் ஆண்டில் எம்.எஸ். பாவாவை ஆசிரியராக கொண்டு வெளிவந்த மாணவன் வாராந்த பத்திரிகை தொடக்கம் தற்போது மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் அரங்கம் வாராந்த பத்திரிகை வரை மிகச்சொற்பமான பத்திரிகைகளே மட்டக்களப்பிலிருந்து வெளிவந்தாலும், கிழக்கின் ஊடகத்துறை வரலாறு துணிச்சல் மிக்க, ஆற்றல் மிக்க பத்திரிகையாளர்களை கொண்டு பயணித்தது என்பதை மறக்க முடியாது.

கடந்த இரண்டு வருடங்களாக 84 இதழ்களாக அரங்கம் பத்திரிகை மலர்ந்திருக்கிறது.

அரங்கம் பத்திரிகையின் அரசியல் போக்குகள் பற்றி சில வேளைகளில் எனக்கு முரண்பாடான எண்ணங்கள் ஏற்பட்டாலும் கிழக்கில் தொடர்ச்சியாக ஒரு பத்திரிகை வெளிவர வேண்டும், மக்கள் மத்தியில் அரசியல் சமூக விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என விரும்பியவர்களில் நானும் ஒருவன்.

மட்டக்களப்பு பிராந்தியம் போன்ற பல்வேறு நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் தகவல் பரிமாற்றங்களையும் மேற்கொள்வதற்கு பிராந்திய பத்திரிகை ஒன்றின் அவசியம் பல காலமாக உணரப்பட்டிருந்தது. அது தொடர்பான கருத்து பரிமாறல்களும் விவாதங்களும் நீண்டகாலமாக இடம்பெற்று வந்தன. .

அரசியல் சமூக விடுதலையை எதிர்நோக்கியிருக்கும் சமூகத்தில் ஊடகங்கள் குறிப்பாக பத்திரிகைகள் ஆதிக்கம் செலுத்தியிருக்கின்றன.

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அதற்கு எதிரான போராட்டங்கள் வடக்கு கிழக்கில் நடத்தப்பட்டன. அக்கால கட்டத்தில் தான் யாழ்ப்பாணத்திலிருந்து ஈழநாடு பத்திரிகை வெளிவரத்தொடங்கியது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஈழநாடு பத்திரிகை பெரும்பங்காற்றியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அதேநேரம் தமிழர் விடுதலைப்போராட்ட இயக்கம் ஒன்றினாலேயே ஈழநாடு பத்திரிகை அலுவலகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டு அப்பத்திரிகை நிறுத்தப்பட்டது என்பதும் துன்பகரமான செய்திதான்.

கொழும்பு தலைநகருக்கு வெளியே பிராந்தியம் ஒன்றிலிருந்து மூன்றிற்கு மேற்பட்ட தினசரி பத்திரிகைகள் வெளிவருவது யாழ்ப்பாணத்தில் தான்.

சில காலம் யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு பத்திரிகைகளும் தினசரியாக வெளிவந்தன. அத்தனையும் இலாபத்தில் இயங்கின என்பதும் குறிப்பிட வேண்டிய விடயம்.

ஆனால் மட்டக்களப்பிலிருந்து காலத்திற்கு காலம் வெளிவந்த பத்திரிகைகள் இடைநடுவில் நின்று போனமை துரதிஷ்டம் தான்.

மட்டக்களப்பிலிருந்து வாரப்பத்திரிகை அல்லது தினசரிப்பத்திரிகை ஒன்று வெளிவர வேண்டும் என்ற கோரிக்கை சமூக ஆர்வலர்களால் வெளிப்படுத்தப்பட்டு வந்த நிலையில் 1994ஆம் ஆண்டு விடிவானம் என்ற வாரப்பத்திரிகை மட்டக்களப்பிலிருந்து மன்று நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

**இரா. துரைரத்தினம்**

அதன் பின்னர் 1998ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மட்டக்களப்பிலிருந்து தினக்கதிர் பத்திரிகை வார இதழாக முதலில் வெளிவந்தது. அதன் பிரதம ஆசிரியராக நான் கடமையாற்றினேன். அப்பத்திரிகை பின்னர் தினசரி பத்திரிகையாக வெளிவந்தது. தினசரி பத்திரிகையாக வெளிவந்த போது அதன் பிரதம ஆசிரியராக எஸ்.எம். கோபாலரத்தினம் பணியாற்றினார்.

2002ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நள்ளிரவு வேளையில் மட்டக்களப்பு நகரில் திருமலை வீதியில் இருந்த தினக்கதிர் அலுவலகத்திற்குள் புகுந்த விடுதலைப்புலிகள் அங்கிருந்த பத்திரிகைகளுக்கு தீ வைத்து விட்டு அங்கிருந்த கணணிகள் மற்றும் பெறுமதியான பொருட்களை ஏற்றிச்சென்றனர்.

நீண்ட வரலாற்றை கொண்ட ஈழநாடு பத்திரிகை விடுதலைப்புலிகளின் குண்டுத்தாக்குதலை அடுத்து வெளிவராமல் நின்று போனதை போலவே மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த தினக்கதிர் தினசரி பத்திரிகையும் விடுதலைப்புலிகளின் தாக்குதலை அடுத்து வெளிவரால் நின்று போனது.

அதன் பின்னர் கொக்கட்டிச்சோலையிலிருந்து தமிழ்அலை என்ற பெயரில் விடுதலைப்புலிகள் தினசரி பத்திரிகையை வெளியிட்ட போதிலும் 2004ஆம் ஆண்டிற்கு பின்னர் அப்பத்திரிகையும் வெளிவரவில்லை.

மட்டக்களப்பிலிருந்து ஒரு பத்திரிகை வெளிவர வேண்டும் என்ற கோரிக்கை பல மட்டங்களிலும் பேசப்பட்ட நிலையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முதல் இலங்கையின் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளரும், லண்டனில் பிபிசி தமிழ் ஓசை வானொலியில் பணியாற்றிய அனுபவம் மிக்கவருமான பூபாலரத்தினம் சீவகன் அவர்களால் அரங்கம் வாரப்பத்திரிகை வெளியிடப்பட்டது.




அப்பத்திரிகை மீது பல விமர்சனங்கள் இருந்த போதிலும் காலத்தின் தேவை கருதி வெளிவந்த ஒரு பத்திரிகை என்பதை அப்பத்திரிகை மீது விமர்சனம் வைப்பவர்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

அரசியல் விடயங்கள் மட்டுமன்றி மட்டக்களப்பின் பாரம்பரிய கலைகலாச்சார விடங்களையும் தனித்துவமான நோக்கில் அரங்கம் வெளிப்படுத்தியிருந்தது.


தேசியப்பத்திரிகைகள் தொடாத பல விடயங்களை அப்பிராந்தியத்தின் தனித்துவத்துடன் சொல்வதில் அரங்கத்திற்கு ஒரு தனிச்சிறப்பு இருந்ததை பல சந்தர்ப்பங்களில் நான் கண்டு பெருமிதம் அடைந்திருக்கிறேன்.

அரங்கம் பத்திரிகை இலவசமாக வெளியிடப்பட்ட போதிலும் அதற்கான முழு ஆதரவையும் வாசகர்களும் விளம்பரதாரர்களும் வழங்கினார்களா என்ற கேள்வியை எழுப்புகின்ற போது அதிருப்தியான பதிலே கிடைக்கிறது.

மட்டக்களப்பிலிருந்து வாரப்பத்திரிகை மட்டுமல்ல தினசரிப்பத்திரிகையும் வெளிவர வேண்டும். அதற்கான தேவை இருக்கிறது. ஆனால் மக்கள் மத்தியில் அதற்கான ஆதரவுதான் பூச்சியமாக இருக்கிறது.

இது மட்டக்களப்பு பிராந்தியத்தின் அரசியல் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பின்னடைவுதான்.

## நவரட்ணராசா குரூஸ் காலமானார்



**வாகரையைப் பிறப்பிடமாகவும் செங்கலடியை வதிவிடமாகவும் கொண்ட எழுத்தாளர் நவரட்ணராசா குரூஸ் அவர்கள் காலமானார்.**

**அன்னார், அரங்கம் பத்திரிகையில் வாகரையின் வாழ்வியல் மற்றும் வதனமார் வழிபாடு ஆகியவை குறித்தும் ஏனைய பல விடயங்கள் குறித்தும் ஆக்கங்களை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**அவருக்கு அரங்கம் தனது அஞ்சலியை தெரிவிக்கிறது.**

**அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது இரங்கல்கள்.**

# சீவகன் : அரங்கம் : நான்

'அரங்கம்' தன் கன்னி இதழை விரித்தது நேற்றுப்போல் இருக்கின்றது. ஒன்றரை வருடங்களைக் கடந்து தனது 84 வது இதழுடன் அதன் அச்சு ஊடக வருகையை நிறுத்திக் கொள்ளப் போகின்றது என்று சீவகன் லண்டனிலிருந்து தொலைபேசியில் எனக்குச் சொன்னபோது அச்செய்தி என்நெஞ்சை நெருடிற்று. எனினும் அரங்கத்தின் ஒவ்வோர் அசைவையும் அக்கறையோடு அவதானித்து வந்தவன் என்ற வகையில் அது தவிர்க்க முடியாததே. அரங்கம் தன்னை நிறுத்திக்கொள்வதற்குப் பொருளாதாரப் பற்றாக்குறை என்பதைத் தவிர வேறு காரணங்கள் இருப்பதாக எனக்குப் படவில்லை.

இலங்கை தமிழ்ச் சூழலில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத் தமிழ்ச் சூழலில் தனியொருவனாக நின்று தனது தனிமனித முயற்சியில் ஒரு வாராந்தப் பத்திரிகையாக 'அரங்கம்' இதழைப் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கிரமமாக அதுவும் இலவசமாக 84 இதழ்களை வெளியிட்டதே பாரிய சாதனையாகும்.

2008 ஜனவரியிலிருந்து ஆரம்பித்து 2013 ஜனவரிவரை சுமார் 05 வருடங்களாக மட்டக்களப்பிலிருந்து 'செங்கதிர்' என்கின்ற மாதாந்தச் சிற்றிதழை (அறுபத்தியொரு இதழ்களை) வெளியிட்ட எனது சொந்த அனுபவப் பின்புலத்தில் 'அரங்கம்' இதழைத் தொடர்ந்து வெளியிடுவதில் சீவகனுக்குள்ள சிரமங்களை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. செங்கதிர் தனது வருகையை நிறுத்திக்கொண்டதற்கும் பொருளாதார முடை தவிர வேறு எக்காரணங்களும் இருக்கவில்லை. அரங்கத்திற்கும் அந்த நிலைதான் ஏற்பட்டிருக்கின்றது.

நானும் 'மட்டக்களப்பான்' என்ற வகையிலே 'அரங்கம்'; ஆசிரியரும் நிறுவனருமான தம்பி சீவகனையும் அவரது பெற்றோர் உற்றார் உறவினர்களையும் பல தசாப்தங்களாக எனக்குத் தெரியும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அனுசரித்துப்போன எனது அரசியற்செயற்பாடுகள் காரணமாகக் குறுகியகாலம் கடல் கடந்து சென்று 'அஞ்ஞாதவாசம்' மேற்கொள்ள வேண்டியிருந்தது. இக்காலத்தில் - 1990 களின் முற்பகுதிகளில் இளம் குடும்பமாகச் சென்னையில் அவர் வசித்த வீட்டில் காலஞ்சென்ற இரா.பத்மநாதன் மற்றும் 'புளொட்' போராளி காலஞ்சென்ற ஈஸ்வரன் சகிதம் விருந்துண்டு மகிழ்ந்த நிகழ்வை இப்போது நினைத்துப் பார்க்கின்றேன்.

பின்னர், அவர் குடும்பத்துடன் நாடு திரும்பிக் கொழும்பில் வசித்த காலத்தில் நானும் நாடு திரும்பியிருந்ததேனினும் மட்டக்களப்புக்கு வரமுடியாத சூழ்நிலையில் எனது குடும்பமும் கொழும்பிற்கு இடம்பெயர்ந்தது.

நான் கொழும்பில் வசிக்கத் தொடங்கிய 1990 களில்தான் ஊடகவாயிலாக அவருடனான நெருக்கம் ஏற்பட்டது. வீரகேசரி மற்றும் தினக்குரல் பத்திரிகைகளில் அவர் பணியாற்றிய காலத்தில் நான் அப்பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகள் எழுதினேன். அக்கட்டுரைகள் அப்பத்திரிகைகளில் பிரசுரம் பெறுவதற்கு அவர் ஒரு ஊக்கியாக இருந்தார்.

மேலும், கிழக்கு மண்ணின் மீதும் மக்களின் மீதும் அவருக்கிருந்த வாஞ்சையும் அவரது சமூகநலநாட்டச் சிந்தனைகளும் என்னை இன்னும் அவரோடு நெருக்கமாக்கிற்று.

அப்போதிருந்த நாட்டுச் சூழ்நிலையால் அவர் கடல் கடக்க வேண்டியதாயிற்று. பின்னர் காலங்கள் ஓடி 2001 இல் நான் லண்டன் சென்றிருந்தவேளை அப்போது அங்கும் ஒரு வானொலிச்சேவையை அவர் பொறுப்பேற்று நடாத்திக்கொண்டிருந்தார். நான் சந்தித்த தினம் சரஸ்வதி பூசைத் தினமாகும். அவரது வீட்டில் பூசைப் பிரசாதங்களை உண்டுகளித்த பின் அவ்வானொலியில் பேட்டி அளித்ததும் எனது ஞாபகத்துக்கு வருகின்றது.

அவர் பின்னர் லண்டன் பி.பி.சி தமிழோசை நிகழ்ச்சியை நடாத்திக்கொண்டிருந்த காலத்தில் மட்டக்களப்புக்கு வந்திருந்தபோது தமிழோசைக்கு என அம்பாறை மாவட்டத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த விபரமான நேர்காணல் ஒன்றினையும் அவருக்கு வழங்கினேன்.

மட்டக்களப்பிலே மாமங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற அவரது மகனின் திருமணத்திற்கு அவரும் அவரது மனைவியும் எனது வீடுதேடிவந்து திருமண தினத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே அழைப்பிதழைக் கொடுத்துச் சென்றனர்.

மகனின் திருமணநிகழ்வில் சந்தித்து பல மாதங்களின் பின்னர் விபுலானந்தர் பற்றிய ஆவணப்பட வெளியீடு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெற்றவேளை மீண்டும் அவருடனான சந்திப்பு நிகழ்ந்தது. மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவகாலத்தில் 'உடையார் குடும்ப' திருவிழாக்காலத்தில் அதிகமாகச் சீவகனைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

வெளிநாட்டில் அவர் வசித்தபோது மட்டக்களப்பு மண்ணுக்கும் மக்களுக்கும் ஒன்றுமே செய்யவில்லையே என்கின்ற ஆதங்கம் அவர் மனதை அங்கலாய்த்துக்கொண்டிருந்தது. தந்தையின் அந்த ஆதங்கம் அவருடைய தனயன்களுக்குப் புரிந்தது. மட்டக்களப்புக்குச் சென்று உங்கள் சேவைகளை வழங்கிவிட்டு வாருங்கள் எனத் தனது பெற்றோர்களை அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

இதன் விளைவுதான் சீவகன் தனது மனைவி சகிதம் நாடு திரும்பி மட்டக்களப்பு பார் வீதியில் வாடகைக்கு ஒரு வீட்டை அமர்த்திக்கொண்டு 'அரங்கம்' பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. அச்சு ஊடகம் மட்டுமல்லாது மின் ஊடகம் மூலமும் அரங்கம் தன் பணிகளை விசாலித்தது.

**செங்கதிரோன்**
**த.கோபாலகிருஸ்ணன்**

'அரங்கம்' அச்சு ஊடகத்தின் சேவைக்காலம் குறுகியதெனினும் அக்காலத்தினுள் கிழக்கிலங்கையின் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு குறித்த தேடற்கரிய கருவூலங்களை வெளிக்கொணர்ந்து ஆவணப்படுத்துவதிலும் கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் தனித்துவமான சமூகபொருளாதார அரசியல் பிரச்சினைகளைத் தீர்வைநாடி வெளிப்படுத்துவதிலும் கிழக்கு மண்ணின் சமூகபொருளாதார அரசியல் மேம்பாட்டுக்கான திசைகாட்டியாகவும் 'அரங்கம்' ஆற்றிய பணிகள் மகத்தானவை.




தேசிய நாளிதழ்களிலும் வேறு சிற்றிதழ்களிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்திருந்தாலும் கூட அரங்கம் பத்திரிகைக்கு எழுதுவதுதான் எனக்கு அதிகம் ஆத்மதிருப்தியைத் தந்தது எனலாம்.

அரங்கம் வாராந்தம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வெளிவரத்தொடங்கியதிலிருந்து வெள்ளிக்கிழமைகளுக்காகக் காத்திருப்பது எனக்குக் காதலன் காதலிக்காக் காத்திருப்பது போலாயிற்று.

அரங்கம் இதழ்கள் இலவசமாகவே வாசகர்களுக்கு வழங்கப்பெற்றன. குறைந்த விலையாவது குறித்து வழங்கவேண்டும் என்று நான் சீவகனைக் கேட்டபோதெல்லாம் அவர் மௌனமாக மறுத்துவிட்டார். தனது உழைப்பின் தேட்டங்களையும் தனது தனயன்களின் வருமானங்களையும் அரங்கத்தில் கொட்டினார். அதற்காக அவர் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. கிழக்கு மண்ணின் மீதும் மக்கள் மீதும் அவர் கொண்டிருந்த வாஞ்சை அவருக்கு ஓர் ஓர்மத்தை மனதில் வளர்த்து விட்டிருந்தது. தான் மட்டக்களப்புக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற தர்மாவேசமே அது.

அவரது அந்தரங்க சுத்தியான எண்ணங்களும் - தனக்கெனப் பிரதிபலன் எதிர்பாராத பணிகளும் - தனக்குச் சரியெனப்பட்டதை வெளிப்படுத்தும் நெஞ்சுத் துணிவும் - விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் - தான் எண்ணித்துணிந்த கருமங்களை எவருக்காகவும் எந்த நன்மைகளுக்காகவும் சமரசம் செய்ய விழையாத உறுதிப்பாடும் - அதேவேளை எல்லோருடனும் அது எதிரியாக இருந்தாலும் கூட இன்முகத்துடன் பழகும் பணிவான பாங்கும் சீவகனிடம் நான் அடையாளம் கண்ட அவரது குணாம்சங்களாகும். என்னை அன்றிலிருந்து இன்றுவரை அண்ணன் என்றே அழைப்பார்.

ஏனோதெரியவில்லை என்மீது அவருக்கு 'வாலாயம்' இருந்ததாகவே நான் உணர்கின்றேன். காரணம் கிழக்கு மண்ணின் மீதும் மக்கள் மீதும் எம் இருவருக்கும் இருந்த வற்றாத வாஞ்சையாக இருக்கலாம்.

'அரங்கம்' தனது ஊடகப்பணியுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் பல கலை இலக்கிய சமூக விளையாட்டுத்துறைப் பணிகளையும் ஆற்றியுள்ளது. அவற்றை எழுதப்புகின் கட்டுரை விரிந்துவிடும்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் 'மீன்மகள் பாடுகிறாள்.... வாவி மகள் ஆடுகிறாள்.... மட்டுநகர் அழகான மேடையம்மா ! இங்கே ! எட்டுத்திக்கும் கலையின் வாடையம்மா ! ' என்ற பாடலை மீண்டும் உலகளாவிய ரீதியில் பிரபல்யமடையச் செய்ததிலும், மட்டக்களப்பின் அடையாளமாகத் திகழ்கின்ற 'சீமைப்பனை' பற்றிய விபரங்களை வெளிக்கொணர்;ந்ததிலும் சீவகனுக்குப் பங்குண்டு.

யாழ்மேலாதிக்கவாத சிந்தனைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு பக்கச்சார்பாகச் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுகின்ற தேசியரீதியில் வெளிவருகின்ற தமிழ் நாளிதழ்கள் பிரசுரிக்கத் தயங்குகின்ற எனது அரசியல் பத்தி எழுத்துக்களுக்குத் துணிந்து 'அரங்கம்' களம் கொடுத்தது. வாராவாரம் 'சொல்லத் துணிந்தேன்' எனும் தலைப்பின்கீழ் நான் எழுதிய பத்தி எழுத்துக்கள் அந்தவகையில் குறிப்பிடத்தக்கவை.

உண்மைகள் வெளிச்சத்துக்கு வரவேண்டும் என்ற ஊடக தர்மத்தை 'அரங்கம்' அச்சொட்டாகக் கடைப்பிடித்தது. உண்மையும் நேர்மையும் பக்கச்சார்பின்மையும் வெளிபடைத்தன்மையும் அவற்றால் விளையும் சமூகப் பயன்பாடுகளுமே ஊடக தர்மங்களாகும். அரங்கம் அதற்கோர் எடுத்துக்காட்டு என்பேன்.

இப்போது அவர் குடும்பத்துடன் மீண்டும் லண்டன்வாசியாகிவிட்டார். ஆனாலும் அரங்கம் அச்சு ஊடகம் தவிர்ந்த ஏனைய அதனது சமூகநலன் சார்ந்த பணிகள் அங்கிருந்தும் இனிமேல் அரங்கேறும். அத்தகைய அத்தனை பணிகளுக்கும் இங்கிருந்து நாம் தோள்கொடுப்போம். எப்போதும் அவருடன் கைகோர்க்க நாம் காத்திருக்கின்றோம். மட்டக்களப்பு மண் அவரது மீள்வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கின்றது.

கிழக்கிலங்கையின் வரன்முறையான வரலாறு எழுதப்படும்போது அரங்கம் அச்சு ஊடகம் ஆற்றிய பணிகளுக்காகவும் ஓர் அத்தியாயம் ஒதுக்கப்படும். உண்மையிது; .வெறும் புகழ்ச்சியில்லை.

# அரங்கம்: ஒரு நண்பனை இழத்தல்



அது 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம். ஆரையம்பதியைச் சேர்ந்த நண்பரும் ஆய்வாளருமான திரு.சொ.பிரசாத் அவர்கள் ஒரு நாள் அழைப்பெடுத்தார். “மட்டக்களப்பிலிருந்து அரங்கம் என்ற பெயரில் பத்திரிகை ஒன்று வெளியாகின்றது. காத்திரமான ஆக்கங்களை எதிர்பார்க்கிறார்கள். எழுதலாமே?” என்றுசொன்னார். “எதை எழுதுவது அங்கிள்?” என்றுகேட்டேன். “கிழக்கிலங்கையை மையமாகவைத்துத்தான் இந்தப் பத்திரிகை வெளியாகிறது. அதுசார்பாக எதுவும் எழுதலாம்” என்றார் அவர். பொதுவாக என்று சொல்லிவிட்டதால், என் பிறந்தகம் தம்பிலுவில் பற்றியே ஒரு கட்டுரை எழுதி அவருக்கே மின்னஞ்சல் அனுப்பிவிட்டேன். சிலநாட்களிலேயே அரங்கத்தின் ஆசிரியர் திரு.பூபாலரெட்ணம் சீவகன் ஐயாவிடமிருந்து அழைப்பு வந்தது. ஆக்கம் நன்றாயிருப்பதாகச் சொல்லி தொடர்ச்சியாக ஆக்கங்களை அனுப்புமாறும்கோரினார். அன்று தொடங்கிய அரங்கத்தின் உறவு சுமார் ஒன்றேமுக்கால் ஆண்டுகளுக்குப்பின் இன்று முற்றுப்புள்ளியை நெருங்கி வந்து நிற்கிறது.

சமகாலத்தில் செய்தி ஊடகமொன்றை நடத்துவது மிகச்சிக்கலான ஒருவிடயம். அது மக்களைக் கவரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும். அதற்கென தொடர்ச்சியான விளம்பரவழங்குநர்கள், புரவலர்கள் இருக்க வேண்டும். பக்கச்சார் பற்ற ஊடக தர்மத்தை அந்த செய்தியூடகம் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அது மக்கள் வரவேற்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும், அதன் வர்த்தக நாமம் நன் கு பரவலாக வேண்டும். இவை ஒரு ஊடகம்வெற்றிகரமாக இயங்குவதற்கான அடிப்படையான சில தேவைப்பாடுகள்.

ஆனால் சமகாலம், செய்தியூடகங்களுக்கு மிகச்சவாலான ஒரு காலம். இன்று சமூக வலைத்தளங்கள் சம்பவமொன்று இடம்பெற்ற அடுத்தகணத்திலேயே அதைஅனைவருக்கும் எடுத்துச் செல்லுமளவுக்கு அதிவிரைவாக இயங்குகின்றன. இன்னொருபக்கம் இணையம் எல்லாத்துறைகளிலும் தன்னை நிலைநிறுத்தி விட்டது. செய்தியூடகங்களில் தங்கியிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இன்று யாருக்கும் இல்லை. இணையத்துக்குச் செல்லும் எல்லோருக்கும் எல்லாமும் எந்த நிமிடத்திலும் தெரிந்துவிடும். இந்த நிலையில் ஏற்கனவே தங்களை நிலைப்படுத்திவிட்ட காட்சியூடகங்களும் வானொலியூடகங்களும் கூட பலத்த பிரயாசைப்பட்டு தம்மை நேயர்கள் கைவிடக்கூடாது என்பதற்காக பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றன.

இவற்றின் நிலைமையே இப்படி இருக்க, இதழ் ஊடகங்களின் நிலைமை பற்றி சொல்லவே தேவையில்லை. ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும் அச்சடிக்கும் பத்திரிகைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதை பல பத்திரிகையாசிரியர்கள் பெருமூச்சுடன்தான் சொல்லி வருகிறார்கள். பல பத்திரிகைகள் பெருமளவு எண்ணிம (டிஜிட்டல்) உலகுக்கு மாறிக் கொண்டிருக்கின்றன. இப்போது அரங்கமும் அதே இக்கட்டான நிலைமைக்கே வந்து சேர்ந்திருக்கிறது.

இப்படி ஏனைய இதழியல் ஊடகங்களுடன் ஒப்பிட்டுச் சொன்னாலும், அரங்கத்தை பொதுமைப்படுத்தி கருத்துக் கூறமுடியாது. அரங்கத்தின் ஒருகட்டுரையாளனாகவும், தொடர்ச்சியான வாசகனாகவும் நான் கண்டுவருகின்ற தனித்துவங்கள் பல.

முதலாவது, அரங்கம் இதழ், இறுதி வரைஇலவச இதழாகவே கிடைத்து வந்திருக்கிறது. இலங்கை வரலாற்றில் இப்படி ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக, சுமார் 80 இதழ்கள்இலவசமாகவெளியான வாரஇதழ் என்றபெருமை, நானறிந்த வரையில் அரங்கத்துக்கே உண்டு. “இலவசமாகக் கிடைத்தால் நம்மக்களுக்கு அதன் அருமை தெரியாது. பெரிய அளவில் வேண்டாம். இரண்டுரூபா, ஐந்துரூபா என்றாவது விலை வையுங்கள்” என்று அரங்கத்தின் ஆசிரியரிடம் கோரிக்கைவிடுத்த பலரில் நானும் ஒருவன். அவர் புன்னகையோடு மறுத்திருக்கிறார். சிலவாரங்களில் அதிக வண்ணப் பக்கங்களுடனும், சில இதழ்களுக்கு எந்தவித விளம்பரமே கிடைக்காமலும் கூட அரங்கம் வெளியாகியிருக்கிறது. இதழியல் துறையில் அதை ஒரு சாதனை என்றுதான் சொல்லவேண்டும்.

இரண்டு, அதன் உள்ளடக்கம். முன்பே சொன்னது போல், வாசகரைக் கவர்வதற்காக எல்லா ஊடகங்களுமே தரமிறங்கி விட்டன. இணையத்தில், தமிழகத்தின் - இலங்கையின் பிரப லஊடகங்கள் உட்பட“இந்த நபர் செய்தகாரியத்தைப் பாருங்கள்”, “ஒரு பெண்வீதியில் செய்த காரியம்”என்றெல்லாம் கீழ்த்தரமான தலைப்புக்களை இட்டே நேயர்களை கவர வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. காட்சியூடகங்களோ செய்திகளுக்காக நாவைத் தொங்கப்போட்டு அலைவதைக் காணலாம். இருபத்துநான்கு மணி நேரச்செய்திச் சேவைகள் செய்திகளுக்காக அலைவதும், செய்தியொன்றைக் கண்டுவிட்டால், அதைத் தூக்கிப் பிடித்து ஊதிப் பெருப்பித்துக் காட்டுவதும், பொதுமக்களின் கவனத்தை உருப்படியான வேறு காரியங்கள் மீது திசை திருப்பாது தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க முயல்வதுமாக, பார்வையாளர்களின் உணர்வுகளோடு விளையாடிக் கொண்டிருக்கின்றன. ஊடக அறத்தின் எல்லையைக் கண்டு அதற்குள் நிற்பவை மிகச் சில ஊடகங்களே. சந்தேகமின்றி அவற்றில் அரங்கம் ஒன்று.

அரங்கத்தில் சில பக்கங்கள்தான் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. அதுவார இதழ் என்பதால், செய்திகளை தேவையற்ற சூடு தவிர்த்து, உள்ளதை உள்ள விதத்தில் பதிவு செய்து கொடுக்க, அரங்கத்தால் இயன்றது. அதன் எஞ்சிய பக்கங்கள் ஒரு சேகரிப்பு ஆவணமாகப் பேணும் வகையிலேயே அதன் தரத்தை பேணி வந்தன. பொதி சோற்றைச் சுற்றுவதற்கு பழைய அரங்கம் பத்திரிகையைப் பயன்படுத்தியதற்காக அங்கிருந்த பெண்மணி ஒருவர் வெகுண்டு அந்த தாளைப்பறித்து பத்திரமாக சேமித்து வைத்த சம்பவமொன்றை நண்பரொருவர் மூலம் அறிந்தேன்.

பண்பாடு, சமூகவியல், அரசியல், பொருளாதாரம் முதலான பல்வேறு சிக்கல்களை வெவ்வேறு கோணங்களில் ஆய்ந்த பேராசிரியர். சி.மெளனகுரு, செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன், கலாபூஷணம்அரங்கம்தவராஜா, தமிழ்க்கவி, படுவான்பாலகன், எழுவான்வேலன், அறுமுகுட்டி போடி போன்றோரின் தொடர் கட்டுரைகள் அரங்கத்தின் வாசகர்களுக்கு ஒருவரம் என்றே சொல்ல வேண்டும். ஒரு செய்தித்தாளாக மட்டுமல்லாமல், ஒரு கலை இலக்கிய இதழாகவும் அரங்கம் இயங்க முயன்றிருந்தது என்று சொல்லலாம்.

மூன்றாவது சிறப்பம்சம், அரங்கத்தின் வாசக அடைவு. எங்கள் ஊரில் சிகையலங்காரக் கடையொன்றில் அரங்கம் இதழ் விநியோகிக்கப்பட்டு வந்தது. அரங்கம் வெளிவராத வாரங்களில், அல்லது வந்து சேரத் தாமதமாகும் வாரங்களில் “இந்தக் கிளம அரங்கம் வரல என” என்று தேடி விசாரிக்குமளவு, அந்தக்கடை உரிமையாளரையும் வாடிக்கையாளர்களையும் அது வசீகரித்திருந்தது. அரங்கம் பத்திரிகையை நன்கறிந்த பலர், கிழக்கின் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில்தான் அதிகம் இருக்கிறார்கள். இலவசமாக அரங்கத்தைத் தொடர்வதற்கு “வாசிப்பில் ஆர்வம் இருந்தும், பத்திரிகையொன்றை பணம்கொடுத்து வாங்கமுடியாதவர்கள் நம்மக்கள்” என்று சீவகன் ஐயா அடிக்கடி காரணம் சொல்வார். பெரும்பாலும் பின்தங்கிய, பொருளாதாரவசதிகள் குறைந்த கிராமங்களையே குறிப்பிடத்தக்களவு குறி வைத்திருந்ததை ஒரு பத்திரிகையாக அதன் வெற்றி என்றே கூற வேண்டும்.

அரங்கத்தின் நான்காவது மற்றும் முக்கியமான தனித்துவம், அது கிழக்கின் குரலாக ஒலித்தது என்பதே. பண்பாட்டு - அரசியல் தளத்தில் தங்கள் விசேடமான பிரச்சினைகள் சிங்களத் தரப்பாலோ வடக்குத் தமிழர் தரப்பாலோ முழுமையாக புரிந்து கொள்ளப்படவே இல்லை என்ற குற்றச்சாட்டு கீழைக்கரை அறிவுஜீவிகளால் அடிக்கடி முன் வைக்கப்படுவதுண்டு. இந்த முரண் குரலை எழுப்பிய பெரும்பாலானோர், அந்த இடைவெளியை நிரப்பாததில் தம்பக்கமும் தவறு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டதே இல்லை.

அரங்கம் அந்தக் குறைபாட்டை ஏற்றுக்கொண்டு வித்தியாசமான அணுகு முறைகளை பிரயோகித்தது. “கிழக்கு மண்குறித்து பிறர் பேசத் தயங்கும் விடயங்களை இங்கு எவரும் பேசலாம்” என்று அனைவரையும் அழைத்தது. இன நல்லிணக்கத்தை முக்கியமான தொனிப்பொருளாக்கிக்கொண்டது. அரசியல், பண்பாட்டு, வரலாற்று ரீதியில் கிழக்கை மையப்படுத்திய ஆய்வுப்பார்வையில் வெளியான பல கட்டுரைகள் வாசகர்களைச் சிந்திக்க வைத்தன. யுத்தத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் கீழைக்கரைக்காக ஒலித்த கவனிக்கத்தக்க முக்கியமான ஊடகக்குரல் என்று இன்று அரங்கத்தையே சுட்டிக்காட்ட முடியும்.

இதன் மறுபக்கமாக அரங்கம்தன் வாசகத்தளத்தை மலையகம், கொழும்பு, புத்தளம், வடக்கு என்று விரிவாக்க முயன்றபோது, தனது கிழக்குச்சார்பு

**வி.துலாஞ்சனன்**

அம்சங்களால் அது பிரதேசவாத முத்திரை குத்தப்பட்டதை நான் அறிவேன். ஆனால்கிழக்கு இன்னஇன்ன விடயங்களில் ஏனைய தமிழ்பேசும் நிலங்களுடன் வேறுபடுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் கட்டுரைகள் அதில் வெளியாயினவே தவிர, ஒரு பொது கற்பனை எதிரியைக் கட்டமைத்துக் கொண்டு அந்த எதிரியால்தாம் ஒடுக்கப்படுவதாக அல்லது புறக்கணிக்கப்படுவதாக நீதி கோரும் பாணியிலான கட்டுரைகளை அரங்கத்தில் காண முடிந்ததில்லை. அரங்கம் மாற்றுத் தரப்புகளை வரையறுத்துக் கொண்டு அவர்களுடன் போராடுவதற்காக எழுப்பப்பட்ட அறைகூவல் அல்ல; அது குரலற்றவர்களுக்காக எழுப்பப்பட்ட ஒரு மாற்றுக்குரல். அவ்வளவுதான்.

தொடர்ச்சி பக்கம் 15




# இயங்கும் சக்தி இயங்கிக் கொண்டேயிருக்கும் சீவக அனுபவம்

சீவகனுக்கும் எனக்குமுள்ள உறவு நீண்ட நாள் உறவல்ல, அது மிக குறுகிய கால உறவு.குறுகிய கால உறவாயினும் அது இருநிலம் பிளக்க வேர்விட்ட உறவு, இந்த உறவு எப்படி ஏற்பட்டது?

2012 இல் என நினைக்கிறேன்

சீவகன் எனக்கு அறிமுகமாகின்றார். நாம் நடத்திகொண்டிருந்த மட்டக்களப்பு அரங்க ஆய்வுகூடத்திற்கு ஒரு நாள் வருகின்றார். அதற்குமுன்னரேயே அவர் பி,பி,ஸி யில் வேலை புரிந்தவர் என்ற பிம்பம் எனக்கு இருந்தது. ஈழத்து இசை பற்றி ஒரு விவரணச் சித்திரம் ஒலி வடிவில் பி.பி, ஸிக்காகத் தயாரிப்பது அவரது புரஜக்ட். வந்தவர் என்னிடம் அதுபற்றி உரையாடுகின்றார். அங்கிருந்த மாணவர்களுடன் உரையாடுகின்றார். கர்னாடக இசை, ஈழத்து மெல்லிசை இவைதாம் ஈழத்து இசை என்ற கருத்து எல்லோர் மனதிலும் ஊடுருவி இருந்த காலம் அது, இன்றும் அதே துர்ப்பாக்கிய நிலைதான். கல்வித் திட்டம் திணித்த கருத்து.

நம்மிடையே உள்ள ஆதி இசையான



சடங்கிசை, அதனோடொத்த உடுக்கிசை பறை இசை, சிலம்பிசை, தொழிற்பாடல் இசை, விளையாட்டுப் பாடலிசை, வேடிக்கைப்பாடல் இசை, பிறப்பிசை இறப்பிசை, கூத்திசை நாடகப்பாடல் இசை, புராதன மக்கள் இசை என நான் ஈழத்தமிழர் மத்தியில் இருந்த இசையின் பன்முகத்தனமையையும் பரிமாணத்தையும் விளக்கிய பின்னர் 'இதுதான் சேர் எனது நோக்கும் திட்டமும்' எனக்கூறி என்னுடம் ஐக்கியமானார்.

கருத்தொருமிப்பு இருவரையும் நெருக்கியது.

அரங்க ஆய்வு கூடப்பாடகர்களான சுகிர்தா, கிருஸ்ணவேணி, லாவண்யா துஜா, பிரணுஜா, மோகனதாசன் ஆகியோர் பாடிய மேற்குறிப்பிட்ட இசைப்பாடல்களைக் கேட்டு அப்பாடல்களில் மயங்கி அவற்றைப் பதிவு செய்து கொண்டு சென்று இன்னும் அவர் சேகரித்த பாடல்களையும் இணைத்து அருமையானதோர் விவரணச் சித்திரம் தயாரித்தார்.

அது வெளிவந்து பலராலும் வியந்து பாராட்டப்பட்டது.

அரங்க ஆய்வுகூட மாணவியான சுகிர்தா பாடும் சடங்குப்பாடலான அரவான் களப்பலியில் திரௌபதி புலம்பும்

"தருமர் சிரம் பிடிக்க என் மகனே அரவானே நாக கன்னி புத்திரனே உன் சிரமறுக்க மனம் துணிந்தேன்"

எனும் ஒப்பாரிப் பாடலும் அதன் பொருளும் அவர் மனதில் பதிய அவர் பாட்டின் அடிமையானார், சுகிர்தாவின் குரலில் ஈர்ப்பும் உடையரானார்.

2016 இல் மீண்டும் சீவகன் மட்டக்களப்பு வந்தபோது ஓடோடி வந்து அரங்க ஆய்வுகூட அங்கத்தவர்ளை கண்டு அவர் உரையாடியமை, அவர் இந்தப் பாடல்கள் மீதும் இப் பண்பாட்டின்மீதும் அவர் வைத்திருக்கும் பக்திக்குச் சான்று.

2016 இல் வந்த அவர் என்னிடம் தமது ஓர் புதிய யோசனையைக் கூறினார். 'மட்டக்களப்புக்கு என ஓர் பத்திரிகை கொண்டுவரப்போகிறேன் சேர் அதனை இலவசமாக விநியோகிப்பதும் எனது திட்டம்" என்கிறார்.அவர் வேகம் எனக்கு வியப்பளிக்கிறது. அதற்கோ பெரும் முதலீடு வேண்டும், ஆட்பலம் வேண்டும், உழைப்பு வேண்டும், இலவசமாக வேறு கட்டுப்படியாகுமா இது நடக்கிற காரியமா என நினைக்கிறேன், ஆனாலும் அவரின் தீவிர ஆர்வம் எனக்கு அவர் மீது மேலும் பிரியம் ஏற்படுத்துகிறது. அவரை விட இன்னும் வேகமாக நிற்கிறார் அவரை உள் நின்றியக்கும் சக்தியான அவர் மனைவி, பரமேஸ்வரி. அவர் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்.

இருபெரும் வளங்கள்.

நீங்கள் அதில் வாரம் தோறும் எழுத வேன்டும் என்ற ஓர் பெரும் சுமையையும் என்மீது நட்புரிமையோடு சுமத்துகிறார். எனக்கோ தலைக்குமேல் வேலை. நேரம் கிடைப்பதே அருமை. தயக்கத்தோடு ஒப்புகொள்கிறேன்.

அரங்கம் வெளி வருகிறது.

அவர் அங்கு வந்து தனக்கான ஒரு இளம் பணியாளர் அணியினையும் உருவாக்கியிருந்தார். முதல் அரங்கம்

பேராசிரியர் சி.மௌனகுரு

பத்திரிகையைக் காந்தி சிலை அருகில் எமக்கும் முன்னாள் மட்டக்களப்பு மாநகர சபை ஆணியாளர் தவவராஜாவுக்கும் இன்னும் பல பிரமுகர்களுக்கும் சீவகனும் அவர் மனைவியும் அளிக்கின்றனர். அரங்கம் மக்கள் கைகளில் தவழ ஆரம்பிக்கிறது.

தேட்டம் என்ற தலைப்பில் நான் பலதும் பத்தும் எழுத ஆரம்பிக்கிறேன்.

ஒரு நாள் என்னிடம் "சேர் மட்டக்களப்பின் பண்பாடுகள் முக்கியமாகச் சமயப் பண்பாடுகள் பற்றித் தொடராகவும் சுவையாகவும் எழுதுங்கள்' நம்மவர்க்கும் பிறருக்கும் தெரிய வரட்டும் என்கிறார்.

தயக்கமாக இருந்தது, நான் சமய பக்தனல்ல சமயவாதியும் அல்ல என்னிடம் கேட்கிறாரே.

தயக்கத்துடன் ஒப்புகொண்ட நான் எழுத ஆரம்பிக்கிறேன்.

அத் தொடர் 25 வாரங்களாகத் தொடர்ந்த அரங்கம் பத்திரிகையில் வாரம் தோறும் வெளி வருகிறது. எனக்கு மட்டக்களப்பில் வாசகர் இன்னும் கூடுகின்றனர், முன் பின் தெரியாதோரெல்லாம் கடையில் மார்க்கட்டில் பொது இடங்களில் காணும் போதெல்லாம் என்னை பாராட்டுகின்றனர்.

எல்லாப்புகழும் சீவகனுக்கே என எண்ணிக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஞாபகமூட்டி செவாய்க்கிழமை எப்படியும் கட்டுரையை என்னிடமிருந்து பெற்று விடுவார், வேலை வாங்குவதில் விண்ணன்.

இலங்கையில் அண்மையகுண்டு வெடிப்பின் பின் பொதுவாக இலங்கையிலும் குறிப்பாக மட்டக்களப்பிலும் தமிழ்-முஸ்லிம் – சிங்கள ஒற்றுமை மேலும் குறைந்திருந்தது முஸ்லிம்கள் பற்றி பல பிழையான கருத்துகள் அவதூறுகள் பரப்ப்பட்டன. அச்சமயம் என்னிடம் இன ஒற்றுமை பற்றி தொடராக அரங்கத்தில் எழுதுங்கள் சேர் எனக் கேட்டுகொண்டார், அதன் விளைவே அரங்கில் நான் எழுதிய "இப்படியும் வாழ்ந்தோம்-மூவினபேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் கூறும் பழம் கதைகள்." என்ற தொடர்.

இத்தொடர் எனக்கு நிறைய இஸ்லாமிய வாசகர்களை அறிமுகம் செய்ய உதவியது. நேரிலும் கடிதமூலமும் தொலைபேசியிலும் என்னுடன் தொடர்பு கொண்டு வாழ்த்தியவர் பலர்.

அரங்கத்தை இலவசமாக நடத்தியமையினால் அவர் நட்டமடைந்திருந்தார் சற்று

தொடர்ச்சி பக்கம் 15

# 'அரங்கம்' மட்டு அரங்கை விட்டு அகலப்போகிறதா?

மட்டக்களப்பு மண் நீண்ட என்பதை விட பன்னெடுங்கால தனித்துவமான வரலாற்றையும் பண்புகளையும் மரபுகளையும் கொண்டது. ஆனால் அண்மைக்காலமாக தனக்கென சில விடயங்களை அது பேணத் தவறி விட்டது. தேசியம், ஒற்றுமை எனும் பெயரில் அவை நாசுக்காக தவிர்க்கப்பட்டு வந்திருக்கிறது, வருகின்றது.

சுதந்திரம் அடைந்த காலம் முதல் நமக்கான அரசியல் தலைமைத்துவத்தையோ, நமக்கான ஒரு கட்சியையோ கட்டி எழுப்பத் தவறி விட்டோம். அதற்கான தேவைப்பாடு உள்ளது போல் பேசிக் கொண்டு அதனையும் வெளியிலிருந்து வந்து யாரோ செய்ய வேண்டும். நமக்காக நாமே செய்ய முனையும் போது ஆயிரம் வக்கணைகள் நம்மவர்களாலேயே.

இவ்வாறுதான் மட்டக்களப்பில் நமக்கான பத்திரிகை ஒன்றின் தேவைப்பாடு நீண்ட காலமாக உணரப்பட்டு, பேசப்பட்டு வந்தது. பல பேர் பல முயற்சிகளை எடுத்தும் வெற்றியளிக்கவில்லை. தொடர் வருகை சாத்தியமற்றுப் போனது.

இவ்வேளையில்தான் சீவகனின் முயற்சியால் அரங்கம் பத்திரிகையின் வருகையும் தொடரான செயற்பாடும் நிகழ்ந்தது. எம்மையும் கொஞ்சம் ஆசுவாசப் படுத்தியது. இதற்குள் ஆயிரம் கதைகள் வேறு. புலம்பெயர் தேசத்தின் ஊடுருவல், புலனாய்வு, தேர்தலில் போட்டியிடும் நோக்கம், இதற்கான பணம் ஏது, இலவசமாகக் கொடுக்கலாமா?, இதனூடாக பயங்கர வருமானம் இவ்வாறு ஆயிரம், ஆயிரம் கதைகள்.

ச.மணிசேகரன்

அவர் இந்த மண்ணின் மைந்தன் என்பதை மறந்தே பலரும் பேசத் தலைப்பட்டனர். உங்களுக்கு மட்டுமா?அவருக்கு இல்லையா மண் பற்று?

ஏதோ ஆக்ரோசத்தாலும் உந்துதலாலும் வெளிவந்து கொண்டிருக்கும் அரங்கம் தனது 84வது இதழுடன் பயணத்தை நிறுத்திக் கொள்ளப் போகிறது, என்பது மனதுக்கு கவலையளிக்கும் விடயம்.

தான், மட்டக்களப்பிற்காக வந்த பணி நிறைவுற்றது என்பதற்காகவல்ல, தொடர்ந்து வர பொருளாதாரம் இடகொடுக்க வில்லை என்பதே காரணம். மண் பற்றிப் பேசுவோர் எத்தனை பேர் கை கொடுக்க தயாராக இருந்தனர். தேர்தல் காலங்களில் அந்த விளம்பரங்களுக்காக ஏறி இறங்கிய படிகள் எத்தனை? தொலைபேசி அழைப்புக்கள் எத்தனை தெரியுமா? ஆனாலும் இந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலப் பகுதியில் இன்று மீட்டிப் பார்க்கும் போது பலவற்றை அரங்கம் சாதித்துள்ளனதென்றே கருதலாம்.

மட்டக்களப்பினுடைய பண்பாட்டு அம்சங்கள், பேசப்படாத மறுபக்கங்கள், விளையாட்டுக்கள், கல்விப் பகுதி, சமூகவியல், அரசியல் என அனைத்தையும் உள்ளடக்கியதாக அரங்கம் வெளிவந்து மட்டக்களப்பின் வெட்டுமுகத்தை வெளியுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது.

தேசியம் என்ற போர்வையில் ஊடகங்கள் பேச மறுத்த கிழக்கின் அரசியலை வெளிப்படையாகவும் நாசுக்காகவும் பேசியதிலும் அதற்கான அசைவியக்கத்தை ஏற்படுத்தியதிலும் அரங்கத்தின் பங்கு சிறப்பானது.

அதற்காக நம்மவர்களாலேயே பிரதேசவாதிகள் என்று தூற்றவும் பட்டோம்.

பிரதேசம், நாடு, தேசம் கடந்து பல தரப்பட்ட படைப்பாளிகளின் படைப்புக்கள் அரங்கத்தை அலங்கரித்தன. அதற்காகவே அரங்கத்தை நாடியோர் பலர். வெள்ளிக்கிழமையானதும் நான் சில இடங்களுக்கு போனதும் ஓடி வந்து அரங்கத்தை கேட்கும் பெரியவர்கள் பலர் இப்போ மனக்கண் முன் வருகிறார்கள். அவர்கள் மெத்தப்படித்த மேதாவிகள் அல்ல. ஆனால் நல்ல வாசகர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

மின்னிதழில் ஆர்வமாக வாசிக்கும் அன்பர்கள் பலர் இருக்கிறார்கள். இன்றும் புத்தளத்திலிருந்து இர்பான் எனும் அன்பர் அடிக்கடி தொலைபேசி எடுத்து உரையாடியவண்ணமே இருப்பார். இவ்வாறு அரங்கம் பிரதேசம் ,நாடு, தேசம் கடந்து பலரையும் வாசிக்கத் தூண்டியுள்ளது. அவ்வாறான ஒரு பத்திரிகை தனது பயணத்தை நிறுத்த முனைவது பெரும் தூரதிஷ்டமே.

அரங்கம் பத்திரிகை பிரசுரத்துக்கு

தொடர்ச்சி பக்கம் 15

# விளையாட்டு

## கோட்டமுனை மைந்தனின் சாதனை




(ஜெயா)

உலகில் பல சாதனைகள் படைக்கப்பட்ட போதிலும் மட்டக்களப்பின் மைந்தன் இளங்கோவன் மதனன் புதிய உலக கின்னஸ் சாதனை செய்து விட்டுசத்தமில்லாமல் முடிவுக்காய் காத்துநிற்கிறார்.

மட்டக்களப்பின் சாதனை மைந்தன் இளங்கோவன் மதனன் 118 மூலகங்களைக் கொண்ட ஆவர்த்தன அட்டவணையினை இரண்டு நிமிடம் 41 செக்கன்களில் வரிசைக் கிரமமாக அடுக்கி புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

முன்னயை இச்சாதனை இந்தியாவைச் சேர்ந்த ஒருவரால் இரண்டு நிமிடம் 49 செக்கன்களில் செய்து கின்னஸ் சாதனையாக இருந்தது அதனை 8 செக்கன்களால் முறியடித்து இப்புதிய கின்னஸ் சாதனையை இளங்கோவன் மதனன் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இச்சாதனை நிகழ்வானது உலக சாதனை தினமான (நவம்பர் 14) மட்டக்களப்பு நூலக ஒன்றுகூடல் மண்டபத்தில் (14.11.2019) நடைபெற்றது.

இச்சாதனை நிகழ்வினை கண்கானிப்பதற்காக மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி. சரவணபவன், மாநகர பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மட்டக்களப்பு ஆயுர்வேத வைத்திய அலுவலர் திருமதி பிரதீபா பார்த்தீபன், உடற்கல்வி ஆசிரியர்களான டானியல் கஸ்ரோன், ஜி. கிருஸ்ணராஜா ஜீ.பி. பத்மகுமார், சங்கீத ஆசிரியர் ரி.மதனகுமார், ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

கின்னஸ் சாதனையாளர் இளங்கோவன் மதனன் இது பற்றி குறிப்பிடுகையில் 'உயர்தரம் படிக்கும் போதே ஆவர்த்தன அட்டவணையில் உள்ள மூலக்கூறுகளை மனனம் செய்வதில் ஆர்வம் காட்டியதாகவும் இச் சாதனையினை பிறர் செய்வதனை வலைத்தளத்தில் அவதானிக்கும் போது தானும் முயற்சி செய்து பார்த்ததன் பலனாக கின்னஸ் சாதனைக்கு அடுத்ததாக பார்க்கப்படும் இந்தியாவின் நோபிள் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற முடிந்தது என்றும் தற்போது கின்னஸ்ஸில் இடம்பிடிக்க இச் சாதனையினை நிகழ்த்திக் காட்டியுள்ளதாகவும் தன்னால் நிகழ்த்தப்பட்ட இச் சாதனையினை கின்னஸ் நிறுவனத்தாருக்கு அவர்களின் ஒழுங்கு முறைக்கேற்ப காணொளி எடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அந்த வகையில் தமது சாதனையினையும் உத்தியோக பூர்வமாக குறுகிய நாட்களுக்குள் கின்னஸ் நிறுவனம் வெளியிடும் எனத் தெரிவித்ததுடன் தன்னைப் போன்று எமது பிரதேச சாதனையாளர்களும் தமக்கு பரீட்சையமான துறைகளில் சாதனை படைக்க வேண்டும் எனக் கூறினார்.

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் அங்கத்தவரான இளங்கோவன் மதனன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தால் புதிதாக அமைக்கப்பட்டுவரும் புற்தரையிலான கிரிக்கெட் மைதானத்தின் மேற்பார்வை பொறியாளராக கடமையாற்றுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## செட்டிபாளையை நோட்டன் அணியினர் 6 விக்கெட்டுக்கால் வெற்றி



EPP அணியினருக்கும் செட்டிபாளைய நோட்டன் அணியினருக்குமான 30 ஓவர்கள் கொண்ட சினேகபூர்வ கடின பந்து கிரிக்கெட் போட்டியில் செட்டிபாளையம் நோட்டன் அணியினர் 6 விக்கெட்டுக்கால் வெற்றி பெற்றுள்ளனர்.

நாணய சுழற்சியில் வெற்றி கொண்ட EPP அணியினர் 23.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நுPP அணியினர் 18 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இழக்கை அடைந்தனர்.

## சிவானந்தா தேசிய பாடசாலையிலும் 13 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான கிரிக்கெட் பயிற்சிகள் ஆரம்பம்





மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டிற்கான பயிற்சிகள் தற்போது பாடசாலை மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருவதை நாம் அறிவோம். அன்மையில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையும் தமது பாடசாலையில் கல்வி பயிலும் 13 வயதினருக்கான கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சினை ஆரம்பித்திருந்தது.

இந்நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு இச்செயற்பாடுகள் பற்றி கூறப்பட்டதுடன் மாணவர்களுக்கான சீருடைகள் மற்றும் பாதனிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியினை சிவானந்தா பாடசாலையில் கல்வி கற்று புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களின் நிதியீட்டத்தில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமர்கும்.

## உலக தமிழர் பூப்பந்தாட்ட சம்மேளனத்தினால் உதவி!



காரைதீவு நிருபர் சகா

உலக தமிழர் பூப்பந்தாட்ட சம்மேளனத்தினால் கிழக்கு மாகாணத்தில் பூப்பந்தாட்டத்துறையினை அபிவிருத்திசெய்யுமுகமாக ஒரு தொகுதி பூப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அதன் தலைவர் கந்தையாசிங்கம் அதனை அம்பாறை மாவட்டத்திற்கும் அனுப்பிவைத்தார்.

அதனை சம்மேளன அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் விளையாட்டு உத்தியோகத்தருமான பத்மநாதன் வசந்த் வீர,வீராங்களைகளுக்கு அவற்றை வழங்கிவைப்பதைக் காணலாம்.



# பட்டறிவு

## அரங்கம் தந்த சுதந்திரம்!

**என்.சரவணன்**

அரங்கம் 84 இதழ்களை எட்டியிருக்கிறது. அரங்கத்தின் முதலாவது இதழில் இருந்து எழுதுகிறேன். இதுவரை மொத்தம் 35 இதழ்களில் எழுதியிருக்கிறேன்.

அரங்கத்தை தொடக்குவதற்கு முன்னர் நண்பர் சீவகன் பத்திரிகை குறித்து என்னுடன் உரையாடிக்கொண்டே இருந்தார். அப்படியொரு பத்திரிகையில் அவசியத்தைப் பற்றி நிறையவே பகிர்ந்துகொண்டோம். என்னை எழுதச் சொல்லிக் கேட்ட போது எனக்கு மறுக்க முடியாமைக்கு இரு காரணங்கள் இருந்தன. நண்பர் சீவகனை 90களின் நடுப்பகுதியில் இருந்து நான் அறிவேன். சரிநிகருடன் நெருங்கிய நட்பு கொண்டவராக அவர் அப்போது இருந்தார். அதன் பின்னர் பிபிசியில் இணைந்த பின் அவர் உலகம் அறிந்த பிரமுகராக ஆகிவிட்டார். அவரின் குரலை பிபிசி தமிழோசையில் தான் கேட்க முடிந்தது. பிபிசியில் இருந்து அவர் நீங்கிய பின்னர் இந்தப் பத்திரிகையை அவர் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரவேண்டும் என்று நினைக்கவில்லை. இப்பேர்ப்பட்ட ஒரு பத்திரிகையின் தேவை இருக்கிறது. அந்த இடைவெளியை நிரப்ப வேண்டும், முன்னுதாரண பத்திரிகை ஒன்றைக் கொணர வேண்டும் பிரக்ஞையாகவே இருந்ததை உணர முடிந்தது.

அவரின் அந்த பிரக்ஞைக்கு எனது ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டேன். அரங்கம் தொடங்கிய அதே காலப்பகுதியில் நான் தினக்குரலுக்கும், வீரகேசரிக்கும் வாராந்தம் எழுதிக்கொண்டிருந்தேன். எனவே இன்னொரு கட்டுரையும் வாராந்தம் கிரமமாக எழுதுவது என்பது பெரும் சவாலான விடயம். ஆனாலும் அந்த சவாலை என்னளவில் ஏற்றுக்கொண்டு எழுதத் தொடங்கினேன்.

எழுத்துச் சுதந்திரத்தைத் தராத எந்த ஊடகத்திலும் இதுவரை நான் எழுதியதில்லை. எனது சில பிரதான பத்திரிகைகள் எழுதக் கேட்டுக்கொண்டபோதெல்லாம் அப்பத்திரிகைகளின் எழுத்துச் சுதந்திர லட்சணத்தை அறிந்தே நான் நாகரிகமாக தவிர்த்துக்கொண்டேன். தினக்குரலில் எனக்கு வழங்கப்பட்டிருந்த சுதந்திரத்தின் காரணமாக இந்த ஐந்து வருடங்களாக நான் ஞாயிறு வாரப் பத்திரிகைக்கு எழுதிவருகிறேன்.

ஆனால் சீவகன் போதுமான சுதந்திரத்தை எனக்கு அரங்கத்தில் தந்தார். நான் எந்தத் தலைப்பில் எழுதினாலும் அது அவசியமானதாகத்தான் இருக்கும்




என்பதையும் அவர் அறிந்திருந்தார். எழுத்தின் எல்லை குறித்து எம்மிருவருக்கும் இருந்த பொதுப்புரிதல் எமது இணைவை சாத்தியப்படுத்தியது. ஆரம்பத்தில் மலையகம், கொழும்பு, மட்டக்களப்பு பற்றிய கட்டுரைகளை நான் எழுதுவதாகத் தான் பேசி உடன்பட்டிருந்தும் அதன் பின்னர் நான் எழுதுகிற எத்தலைப்பும் வரவேற்புகுரியதாகத் தான் இருக்கும் என்கிற நம்பிக்கை நண்பர் சீவகனிடம் இருந்தது.

எனவே தான் எந்தத் தலைப்பில் எழுதவும் எனக்கு சுதந்திரம் தந்திருந்தார். அந்த சுதந்திரத்தை நான் நன்றாக பயன்படுத்திக்கொண்டேன். துஷ்பிரயோகம் செய்தது கிடையாது.

பெரும் பத்திரிகைகளில் எழுத முடியாத, அங்கு எழுத சந்தர்ப்பம் வாய்க்காத தலைப்புகளை இங்கு எழுதத் தீர்மானித்தேன். அந்தத் தலைப்புக்கள் அனைத்தும் நான் எழுதுவதற்காக நெடுங்காலமாக காத்திருந்த தலைப்புக்கள். குறிப்பாக வரலாறு தொடர்பில் இதுவரை தமிழில் பேசப்படாத விடயங்களை எழுத ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டேன்.

நான்காவது கட்டுரையில் இருந்து எனது பக்கத்துக்கென்று நிலையான தலைப்பாக “பட்டறிவு” என்று இட்டுக்கொண்டேன். அதில் சுய அனுபவக் கட்டுரைகளாக எழுதவே எண்ணியிருந்தபோதும் சமூகம், வரலாறு, பண்பாடு சார்ந்து எழுதினேன்.

எனது எழுத்துக்கள் அனைத்துமே நூலுருவாக்க இலக்கைக் கொண்டது. நூலை எழுதி முடிப்பது என்று தொடங்கிய திட்டங்கள் எப்படி காலவிரயமாகிப் போயின என்பது தொடர்பில் நிறைய கசப்பான அனுபவம் உண்டு. எனவே பத்திரிகைகளுக்கு எழுத ஒப்புக்கொள்வதன் மூலம் எனக்கான நிர்ப்பந்தத்தையும், கிரமத்தையும், ஒழுக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன். அதேவேளை மேம்போக்காக எழுதாமல் நூலுக்கான கட்டுரை என்கிற ஆழத்துடனும், பிரக்ஞையுடனும் அக்கட்டுரைகளுக்கு அதிக அளவு உழைப்பைக் கொடுக்கவே செய்கிறேன். எனவே தான் அரங்கத்தில் வெளிவந்த கட்டுரைகள் தொடர்பில் எனக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

புதிய வாசகர்கள் எனக்கு அறிமுகமானார்கள். எனது கட்டுரை வெளிவராத வாரங்களில் “ஏன் உங்கள் கட்டுரை வெளிவரவில்லை? என்று ஏமாற்றத்துடனும், உரிமையுடனும் கேள்வி கேட்கும் வாசகர்களைப் பெற்றுக் கொடுத்தது அரங்கம்.

எனது கட்டுரைகளை உரிய நேரத்தில் கொடுக்க முடியாமல் கடைசி நேரம் வரை இழுத்தடித்திருக்கிறேன். அப்போதெல்லாம் பொறுமையுடன் எனக்காக காத்திருக்கிறார் நண்பர் சீவகன்.

இதுவரை எழுதிய கட்டுரைகள் அத்தனையும் முழுப் பக்கக் கட்டுரைகள். சில கட்டுரைகள் இரு பக்க கட்டுரைகளாகவும் இருந்திருக்கிறது. இடப்பிரச்சினை இருந்தால் நீங்களே தயக்கமிலாமல் சுதந்திரமாக வெட்டிக்கொள்ளுங்கள், எப்படியும் இது நூலில் பின்னர் இடம்பெறும், என்று சீவகனிடம் கேட்டிருக்கிறேன். ஆனால் அவர் முழுமையாகவே அவற்றைப் பிரசுரித்தார். எனது கட்டுரைக்கு முன்னுரிமை அளித்து வடிவமைப்பு செய்து முடித்த பக்கங்களை தவிர்த்திருக்கிறார். பொதுவாக கட்டுரையாளர்கள் விரும்புவது வாசகர்களின் வினையாற்றல். பெரும்பாலும் அக்கட்டுரையாளர்களுக்கு அந்த வாசகர்களின் எண்ணங்கள் போய் சேருவதில்லை. ஆனால் அவ்வப்போது என் கட்டுரைகளுக்கு கிடைக்கும் வரவேற்பையும், எதிர்வினைகளையும், கருத்துக்களையும் சீவகன் பகிர்ந்து வந்திருக்கிறார். இதைவிட ஒரு கட்டுரையாளனுக்கு என்ன வேண்டும்?

அதுமட்டுமன்றி சென்ற ஆண்டு இலங்கை சென்றிருந்தவேளை மட்டக்களப்புக்கு என்னை அழைத்து அரங்கம் அலுவலகத்திலேயே வாசகர்களுடனான ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்து அற்புதமான உரையாடலை மேற்கொள்ள வழிவகுத்தார். பேராசிரியர் மௌனகுரு தலைமையில் மேலும் முக்கிய எழுத்தாளர்களுடன் நடந்த அந்த சந்திப்பு என்னை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அரங்கம் கிழக்கில் ஒரு புதிய ஊடக கலாசாரத்தை ஏற்படுத்தியிருகிறது என்பதை உறுதியாகக் கூற முடியும். அரங்கத்தின் உள்ளடக்கம் அப்படி.

கடந்த வாரம் அரங்கத்தின் இறுதி இதழ் இதுதான் சரா என்று என்னிடம் சீவகன் கூறியபோது நான் அதிர்ந்தே போனேன். ஒரு லட்சிய ஊடகக் கனவு தன்னை இடைநிறுத்திக் கொள்கிறது என்கிற செய்தியை இலகுவாக கடந்து போக முடியவில்லை. இந்த இழப்பு எனக்கோ, சீவகனுக்கான இழப்பல்ல மாறாக நமது மக்களுக்கும், தரமான வாசகர்களுக்குமான இழப்பு. அரங்கம் குறுகிய காலத்தில் அந்தளவு சாதித்துக் காட்டியிருக்கிறது.

தொடர்ச்சி...

## மகிந்த பிரதமர...



மாகாணங்களுக்கு இன்னமும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவில்லை.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவலாக நியமிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவன்ச சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குக் கடிதம் எழுதியுள்ளார். ஆனால் சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டுமெனக் கோரி 45 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## படுவான்கரையின் அரங்காக இருந்து அரங்கம்!

**படுவான் பாலகன்**

அரங்கம் படுவான்கரைப் பிரதேசத்தில் பேசப்படாத பல விடயங்களை அந்தந்த இடங்களில் நின்று பேசியது. பலரின் கரங்களுக்கு அரங்கம் பொக்கியசமாய் மாறியது. ஆரம்பத்தில் கையிழந்த யுவதியின் திறமையை பேசுபொருளாக கொண்டுவந்த அரங்கம், படுவான் திசையில் நின்றுகொண்டு பல விடயங்களை உரையாடல் ஊடாக கூறியதென சிவநேசன் அருட்செல்வத்துடன் பேசும் போது கூறினான்.

தற்காலத்தில் நாளேடாக மட்டக்களப்பில் இருந்து பத்திரிகையொன்று வருகைதர வேண்டுமென பலரும் எண்ணினாலும் அதற்கான முதலீடுகளை இட்டு அதனை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு யாரும் இன்மை என்பதும் கவலையானதொன்றுதான்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பிராந்திய பத்திரிகைகள் கடந்த காலங்களில் வெளிவந்தாலும், தற்காலத்தில் பிராந்திய பத்திரிகைகள் வெளிவராமை கவலையானதொன்றுதான். இந்நிலையில்தான் இருவருடகாலத்திற்கு முன்பு தோன்றிய வாரப்பத்திரிகையாக அரங்கம் வெளிவந்தது.

தற்போதைய நவீன யுகத்தில் பத்திரிகைகளை இருந்து வாசிப்பது, அதற்கு நேரத்தினை ஒதுக்குவதென்பது குறைவாகவிருந்தாலும், தேசிய பத்திரிகைகளில் மட்டக்களப்பின் செய்திகளை முழுமையாக அடக்கமுடியாத நிலையுள்ளன. பல செய்திகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அனுப்பப்பட்டாலும் சில செய்திகள் மாத்திரமே இடம்பிடிக்கின்றன. மாவட்டத்திற்கென



பிராந்திய பத்திரிகைகள் வெளிவருகின்ற போது மாவட்டத்தின் மூலைமுடுக்குகள் எங்குமிருந்தும் செய்திகள் வெளிவரும் எனக்கூறி கவலையுற்ற சிவனேசன், அரங்கத்தின் முக்கியத்துவத்தினையும் கூற ஆரம்பித்தான்.

அரங்கம் பத்திரிகையில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டிருந்தாலும், மாவட்டத்தில் பரந்து விரிந்திருக்கின்ற படுவான்கரைப்பிரதேசம் பற்றியும் அரங்கம் பேச ஆரம்பித்திருந்தமை மகிழ்ச்சிக்குரியதே. படுவான்கரைப் பிரதேசத்தில்தான் கலை, பண்பாடு, பாரம்பரியம் பொதிந்து போயிருக்கின்றது. அதேபோன்று அபிவிருத்திகளிலும் பின்தங்கி நிற்கின்றது. திறமையானவர்களும் இங்கேதான் குடி கொண்டிருக்கின்றனர். இவைகள் அனைத்தையும் வெளிப்படுத்தும் களமாக அரங்கம் செயற்பட்டது. அரங்கம் படுவான்திசை, படுவான்கரை மகளீர்கள் தொடர்பிலும் பேசியது. பேசியதன் காரணமாக அம்பிளாந்துறை, பன்சேனை உதைபந்தாட்ட மகளீர் அணியினரின் திறமை வெளியில் கொண்டுவரப்பட்டு அவர்களின் தேவைகளும் இனங்காணப்பட்டன. இத்தேவைகளில் சிலவற்றை அரங்கம் பொறுப்பெடுத்து பன்சேனை அணியினருக்கு உதவினர். அதற்கு அப்பால் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மாவட்ட செயலகத்துடன் இணைந்து இரு அணியினருக்கும் இடையில் மாபெரும் உதைபந்தாட்ட போட்டியினையும் அரங்கம் நடாத்தியிருந்தது. இச்செயற்பாடு மாவட்டத்தில் இன்னுமொரு மாபெரும்



மகளீர் உதைபந்தாட்ட போட்டியை நடாத்துவதற்கு வழிகோலியதெனலாம்.

படுவான்கரைப்பிரதேசம் பற்றி எழுவான்கரையில் உள்ளவர்களும், ஏனைய இடங்களில் உள்ளவர்களும் அறியும் வகையில் அரங்கம் பேசியுள்ளது. ஒருவருட காலத்தினுள்ளும் பல விடயங்களை சேகரித்திருக்கின்றது. பழைய அறியப்படாத விடயங்களையும் வெளியில் கொண்டு வந்திருக்கின்றது. தாம் எதிர்கொள்ளும் சுமைகளையும், அபிவிருத்தி இன்மைகளையும் சம்பந்தபட்டவர்களின் கரங்களுக்கு கொண்டு சேர்ந்திருக்கின்றது. அரங்காக இருந்து அரங்கத்தில் நடைபெறுவதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றது. எனக்கூறியவனாக அவ்விடத்திலிருந்து அகன்றான் அருட்செல்வம்.

---

## சொல்லத் துணிந்தேன்! 27



**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

நடந்து முடிந்துள்ள ஜனாதிபதித் தேர்தலில் 'ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன' வேட்பாளர் கோத்தபாயராஜபக்ச அவர்கள், அளிக்கப்பட்ட செல்லுபடியான 13,252,499 வாக்குகளில் 6,924,255 வாக்குகளையும் 52.25 வீதாசாரத்தையும் பெற்று 1,360,016 மேலதிக வாக்குகளினால் அமோக வெற்றியீட்டியுள்ளார். இவருடைய வெற்றி கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது சமூக பொருளாதார அரசியல் எதிர்காலம் குறித்த பாதுகாப்பையும் நம்பிக்கையையும் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

அதேவேளை 'தாமரைமொட்டு'ச் சின்னத்துக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களால் அளிக்கப்பட்ட வாக்குளின் எண்ணிக்கையின் போதாமையைக் கிழக்கிலே கோத்தபாயராஜபக்ச அவர்களை ஆதரித்துக் கூட்டாகக் களமிறங்கிய பத்துக்கு மேற்பட்ட கட்சிகள் கவனத்திற்கொள்ள வேண்டும். இதற்குக் காரணங்கள் இரண்டு.

ஒன்று, கூட்டாகக் களமிறங்கிய இக்கட்சிகள் கூட்டாகத் திட்டமிட்டுத் தேர்தல் பிரச்சாரங்களை ஒழுங்கான முறையில் கையாளாமல் தனித்தனிக் கட்சிகள் சில தத்தம் கட்சிகளை முதன்மைப்படுத்தியும் தமக்குள்ளே நீ பெரிதா நான் பெரிதா என முரண்பட்டுக்கொண்டும் பிரச்சாரம் மேற்கொண்டமையால் இவர்களின் மீதான வாக்காளர்களின் மதிப்பீடு குறைந்து போயிற்று. ஒற்றுமையையும் மக்கள் நலன்சார்ந்த கூட்டுச் செயற்பாட்டையுமே மக்கள் அங்கீகரிக்கத் தயாராயிருக்கின்றார்கள் என்பதை இக்கட்சிகள் உணரவேண்டும்.

இரண்டாவது காரணம், தமிழரசுக்கட்சி தோற்றம் பெற்ற 1949 இலிருந்து இன்று 2019 வரையிலான எழுபது வருடகாலமாக யாழ் மேலாதிக்க சிந்தனைத் தளத்தின் மீது கட்டியெழுப்பப்பெற்ற போலித் தமிழ் தேசியவாதம் மக்களைப் போதையூட்டி வைத்திருக்கின்றது. இப்போதையிலிருந்து மக்களை மீட்டெடுக்கின்ற மாற்று அரசியல்

தொடர்ச்சி பக்கம் 15

# கிழக்கின் கால்பந்து புலமையாளன் ஜனாப் என்.ரி.பாறுக் - ஓர் அஞ்சலிக் குறிப்பு



இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உபதலைவர்களுள் ஒருவரான ஜனாப் என்.ரி.பாறுக் அவர்கள் மாரடைப்பினால் மரணித்து விட்டார். இவருடைய திடீர் இழப்பு கிழக்கிலங்கையின் கால்பந்தாட்டத்துறைக்கு பேரிழப்பாகவே கொள்ளப்பட வேண்டியது.

ஜனாப் என்.ரி.பாறுக் அவர்கள் கால்பந்தாட்டச் சங்கத்தின் சட்ட திட்டங்கள் அதன் நிருவாக நடைமுறைகள் மற்றும் கால்பந்து விளையாட்டின் விதிமுறைகள் எனப்பல விடயங்களில் மிகப்பிந்திய அறிதல் தெளிதல்களுடன் பாண்டித்தியம்மிக்கவர். கால்பந்தாட்ட கழகங்களின் நிருவாகிகள் கால்பந்தாட்டத்துடன் தொடர்புடைய நிருவாக நடைமுறைகள் சார்ந்தும், சட்ட திட்டங்கள் சார்ந்தும் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்குரிய முறையான வழிப்படுத்தலை மேற்கொள்ளும் வளவாளராக செயலாற்றி வந்துள்ளார்.

மக்கள் வங்கியில் சிரேஸ்ட உத்தியோகத்தராகத் தொழிலாற்றிய இவர் தனது கடமை நேரந்தவிர்ந்த பிற நேரங்களை பெருமளவு கால்பந்தாட்டத்துறையிலேயே செலவிட்டிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றினைத் தனது பிறப்பிடமாகக் கொண்ட இவர் பாடசாலை நாட்களிலேயே கால்பந்தாட்ட வீரனாகப் பிரகாசித்து சருவதேசப் போட்டிகள் வரை சென்று வந்துள்ளார். பாடசாலைக் காலம் நிறைவுற்றதும் கிழக்கில் பிரசித்திபெற்றுத் திகழ்ந்த மட்டுநகர் பாடுமீன் பொழுதுபோக்குக் கழகத்தில் இணைந்து தனது இளமைக் காலங்களில் விளையாடியவர். இதன் காரணமாக தேசியப்போட்டிகள் பலவற்றில் பங்குபற்றித் தனது திறமையினை மேலும் வளர்த்துக்கொண்டார். 1990களின் பின்னர் காத்தான்குடி சன்றைஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்.
1990களின் பின்னர் கால்பந்தாட்ட நடுவராகச் சேவையாற்றுவதிலேயே அதிக ஆர்வஞ் செலுத்தியிருந்தார்.

**து.கௌரீஸ்வரன்**
**நிருவாகச் செயலாளர்**
**மட்டக்களப்பு மாவட்ட**
**கால்பந்தாட்டச் சங்கம்**

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட நடுவர்கள் சங்கத்தில் பல பதவிகளையேற்று இச்சங்கத்தினூடாக இளம் நடுவர்கள் பலர் உருவாகத் தனது பங்களிப்புக்களை வழங்கியுள்ளார்.

1990களின் பின்னரான வருடங்களில் காத்தான்குடியிலிருந்து துவிச்சக்கர மிதிவண்டியில் மட்டுநகர் வெபர் மைதானத்திற்கு வந்து கால்பந்து போட்டிகளை உரிய நேரத்திற்கு தொடங்குவதில் மிகவும் கவனமாகச் செயலாற்றியிருந்தார். அக்காலங்களில் கால்பந்து வீரர்களும், கழகங்களும், இரசிகர்களும் விரும்பிய நடுவர்களுள் ஒருவராக இவர் திகழ்ந்தார்.

திரு என்.ரி.பாறுக் அவர்களின் உடல் தோற்றமும் அவர் ஆடை அணியும் விதமும் பிறரைக்கவருவதாகவே அமைந்திருக்கும் ஒரு கால்பந்தாட்ட வீரனுக்கேயுரிய மிடுக்கான தோற்றத்துடனேயே அவர் எப்போதும் காட்சியளிப்பார். மரணிக்கும் வரை அவர் ஓர் அறுபது வயது இளைஞனாகவே தோற்றமளித்திருந்தார்.

ஏழு தசாப்தங்களைக் கடந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் வரலாற்றில் 1990 - 2015 ஆம் ஆண்டு வரையான மூன்று தசாப்த காலமாக பல பதவிகளை வகித்தவர். நிருவாகச் செயலாளர், தலைவர் ஆகிய பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு மட்டுநகரின் கால்பந்து கழகங்களால் மாண்பு செய்யப்பட்டவர்.

2015 இன் பின்னர் இலங்கையில் புதிய கால்பந்தாட்டச் சங்கங்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்ததால் காத்தான்குடி கால்பந்தாட்ட லீக் உருவானபோது அதன் தலைவராக தெரிவாகியவர். கழகங்களின் அதிகரிப்பால் புதிய சங்கங்கள்

தொடர்ச்சி பக்கம் 15

# மனித உணர்வுகளினை அடிப்படையாகக் கொண்டு நகரும் சந்தைப்படுத்தல் உத்திகள்

தற்போதைய இருபத்தோராம் நூற்றாண்டில் சந்தைப்படுத்தலானது பெரிதும் சவாலான ஒன்றாக நிலைபெற்றுள்ளது. அந்த வகையில் சந்தைப்படுத்தலிற்கான மிகவும் தனித்துவமான ஓர் கருவியாக சந்தைப்படுத்துபவர்கள் மனித உணர்வுகளைப் பயன்படுத்துகின்றனர். ஏனேனில் மனித வளமானது ஏனைய வளங்களுடன் ஒப்பிடுகையில் சிந்தித்து துலங்கக்கூடிய ஆற்றல் கொண்ட வளமாகும்.
ஆகையால் சந்தைப்படுத்துபவர்கள் மனித உணர்வுகளை கட்சிதமாக தங்களுடைய தந்திரோபாயங்களுக்கு உட்படுத்துகின்றனர். அந்த வகையில் சந்தைப்படுத்தலிற்கு மனித உணர்வுகள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என ஆராயலாம்.



நுகர்வோர் மத்தியில் குறித்த பொருள் அல்லது சேவைகள் தொடர்பாக புரிந்துணர்வினையும், அறிவினையும் ஏற்படுத்துவதற்கு விளம்பரப்படுத்தலானது ஓர் சாதனமாக காணப்படுகின்றது. இதனை உற்று நோக்கும்போது ஒருவருக்கு கருத்தும் பொருளும் தெளிவுற நியாயப்படுத்துவதற்கு மனித உணர்வுகளை நிழற்படமாக விளம்பரங்களில் சித்தரிக்கப்படுகின்றது. அந்த வகையில் விளம்பரப்படுத்தலானது பல வழி முறைகளில் கைக்கொள்ளப்படுகின றது.

ஒரு அரச விளம்பரத்திலோ அல்லது தொலைக்காட்சி விளம்பரத்திலோ மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியுமானால் உணர்ச்சிப் பரிமாணங்களை கொண்ட ஒரு விளம்பரக் குறியின் முக்கிய கூறுகளை பிரதிபலிக்க முடியும். உதாரணமாக மனிதர்களுக்கிடையில் மனோபாவங்கள், சக்தி மற்றும் நிதியியல் நிலைகள் மாற்றமடைவது போல வியாபாரக் குறிகளுக்கிடையிலும் பல தனித்துவங்கள் காணப்படுகின்றன. இவற்றினை வேறுபடுத்தி பகுத்தறிவதற்காக மனித உணர்வுகளை வியாபாரக்குறியுடன் தொடர்புபடுத்துகின்றனர். அந்த வகையில் விளம்பரப்படுத்தலானது பொதியிடல் வாசகங்கள், கவர்ச்சி பாவனை முறைகள் மற்றும் கிடைப்பனவுத் தன்மையானது குறித்த ஒரு சிலநொடிகளின் பாவனையாளர்களின் மனதைத் தொடும் வண்ணம் வடிவமைக்கின்றனர். இதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அறிவூட்டல் மற்றும் நுகர்வுத் துண்டுகைசெயன்முறைகள் ஒரே பார்வையில் இடம்பெறுகின்றன.

விளம்பரப்படுத்தலானது மனித உணர்வுகளை தூண்டக் கூடிய இன்னொரு அடித்தளமாகும். எவ்வாறெனில் விளம்பரப்படுத்தலானது ஓர் விபரிப்பு முறையாகும். இதன் மூலம் குறித்த விபரக்குறியானது அடிப்படைத் தன்மைகளை குறிப்பிடுகின்றனர். இதனால் வாடிக்கையாளர்களுக்கு குறுகிய நேரத்தில் கொள்வனவைத் தூண்டக்கூடிய உந்துதலை அளிக்கின்றது.

கொள்வனவாளர்கள் கொள்வனவு நடவடிக்கையில் ஈடுபடுதலானது எதேச்சையான ஒன்றாக எப்போதும் கருத முடியாது. ஏனெனில் கொள்வனவு நடவடிக்கையானது சமீபத்தில் அல்லது கடந்த கால அனுபவங்களில் இருந்து எழலாம். ஆகவே விளம்பரப்படுத்தல் மூலம் மீண்டும் மீண்டும் வாடிக்கையாளர் மத்தியில் தடம் பதிப்பதற்காக விளம்பரப்படுத்தலினை சந்தைப்படுத்துபவர்கள் உபயோகிக்கின்றனர்.

சந்தைப்படுத்துபவர்கள் வாடிக்கையாளர் மத்தியில் சுயகௌரவத்தை தூண்டும் வகையிலும் தமது உற்பத்திகளை விளம்பரப்படுத்தலினூடாக கொண்டு செல்கின்றர். உதாரணமாக, அப்பிள் கம்பனியினால் வடிவமைக்கப்படுகின்ற ஐ போன் ஆனது வாடிக்கையாளர் மத்தியில் தமதுசுய கௌரவத்தினை உறுதிப்படுத்த கொள்வனவு செய்ய தூண்டுகின்றது. இதற்காக அப்பிள் நிறுவனத்தினர் முற்றிலும் வேறுபட்ட வகையில் கறுப்பு வெள்ளை நிறங்களை அனேகமாகப் பயன்படுத்தி மனித உணர்வுகளை தூண்டுகின்றர்.

**செல்வி பு.தீபா**
**02ம் வருட மாணவி. வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம்**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

சந்தைப்படுத்தலானது ஓர் கலையாக காணப்படுவதனால் பெருமளவில் மனித உணர்வுகளில் தாக்கத்தை உண்டாக்குகின்றது. இருப்பினும் பல ஏமாற்று நடவடிக்கைகளும் கைக்கொள்ளப்படுவதனால் சந்தைப்படுத்துபவர்கள் உதாரணமாக வாழ்க்கைக் கோல விளம்பரப்படுத்தலைப் பயன்படுத்துகின்றனர். இவ் முறையானது மக்கள் மத்தியில் உண்மைத் தன்மையினையும் உறுதித்தன்மையினையும் வழங்குகின்றது. இவற்றிற்கு அடிப்படையாக மனித உணர்வுகளையே தமது சாதனமாக பயன்படுத்துகின்றர்.

விளம்பரமப்படுத்தலானது அதிகளவில் மனித உணர்வுகளிலேயே தங்கியிருக்கின்றது என பல ஆராய்ச்சிகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஆறு முக்கிய மனித உணர்வுகளை தமது தந்திரோபாயங்களுக்காக உபயோகிக்கின்றனர். ( ஆச்சரியம், கவலை,கோபம், பயம், வெறுப்பு மற்றும் சந்தோசம்)

இவற்றின் அடிப்படையில் உணர்ச்சி நிலையென்பது எப்போதாவது எம்மால் உணரப்படுகின்ற ஒருவித உணர்வு சார்ந்த அனுபவ நிலையாகும். நாம் உணரும் தூண்டுதலைப் பொறுத்து எமது உணர்வு நிலையானது நாளுக்கு நாள் அல்லது கணத்துக்கு கணம் வேறுபடுகின்றது. இவ் வகையான உணர்வ நிலையானது வெளிப்படுத்தக் கூடியதும் வெளிப்படுத்த முடியாமலும் இன்னமும் உள்ளன.

இவ் உணர்ச்சி நிலையானது மனித அனுபவத்தின் சாதாரண மற்றும் அசாதாரண சிக்கல் வாய்ந்த தொடர்பாடல் முறைகளையும் தோற்றுவிக்க முனைகின்றது. அந்த வகையில் வாய் மொழிமூலமாகவோ அல்லது முக பாவனை மற்றும் மொத்த உடல் இயக்கங்கள், சைகைகள் மூலமாகவோ உணர்ச்சிகள் பிரதிபலிக்கப்படுகின்றன. உணர்ச்சிகளானது தொடர்பாடல் செயன்முறையின் முழுமைக்கு பயன்படுத்துகின்ற ஓர் கருவியாகும். இக் கருவியினைவினைத்திறனாகவும், விளைதிறனாகவும் குறித்த சமூக கலாச்சார பிரதிபலிப்புக்களையும் மற்றும் உரிய சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் தமது சந்தைப்படுத்தல் நடவடிக்கையினை மனித உணர்வுகளுடன் தொடர்புபடுத்தி அக்கால வணிகர்கள் தமது தந்திரோபாயத்தை நகர்த்துகின்றனர்.

இதுவே தற்காலத்தில் எவ்வகையான தொடர்பு சாதனங்கள் உருப்பெற்றாலும் மனித உணர்வுகளை அடிப்படையாக வைத்துக் கொண்டே தமது விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர்.

# கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை
மாதிரி வினாப்பத்திரம் - 2019

கணிதம் - I இரண்டு மணித்தியாலம்

பகுதி–A

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடைஎழுதுக.

1) ஒருவர் ரூ 1500ஐ 10%ஆண்டு எளியவட்டி வீதத்தின் கீழ் ஒருவங்கியில் வைப்புச் செய்கின்றார். முதலாம் ஆண்டின் இறுதியில் இப்பணத்திற்காக அவருக்குக் கிடைக்கும் வட்டி யாது?

2) மடக்கைவடிவத்தில் எடுத்துரைக்குக


$$4^3 = 64$$

3) சுருக்குக

$$\frac{1}{3x} - \frac{1}{6x}$$

4) ஒரு வாகனம் 60கிலோமீற்றர்.∴மணித்தியாலம் எனம் சீரான கதியில் செல்கின்றது. இவ்வாகனம் 180 கிலோமீற்றர் தூரம் செல்வதற்கு எடுக்கும் நேரத்தினை மணித்தியாலத்தில் காண்க.


5) உருவில் தரப்பட்டதகவல்களைக் கொண்டு ABC இன் பருமனைக் காண்க.




6) குறித்த வேலையைச் செய்துமுடிப்பதற்கு 12 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேலையை 8 நாட்களில் செய்துமுடிப்பதற்கு எத்தனை மனிதர்களை ஈடுபடுத்த வேண்டும்?

7) $3xy$, $6y^2$ என்னும் இரு அட்சரகணிதக் கோவைகளின் பொதுமடங்குகளில் சிறியதைக் காண்க.

8) உருவில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு sin θ இன் பெறுமானத்தைக் காண்க.





9) √18இன் முதலாம் அண்ணளவாக்கத்தை கீழே தரப்பட்டுள்ள பெறுமானங்களில் இருந்துதெரிந்தெடுக்க.

4.1 , 4.2 , 4.3 , 4.4

10) A,Bஆகியன n(A)=10, n(B)=15, $n(A \cup B) = 20$ ஆகஇருக்குமாறு இரு தொடைகள் எனின் n(A∩B)ன் பெறுமாறத்தைக் காண்க?

11) O ஐ மையமாகக் கொண்டவட்டத்தின் $A\hat{C}B = 40°$எனின் $B\hat{A}O$ இன் பெறுமானம் யாது?




12) காரணிகளைக் காண்க.


$$a^2 - 49$$

13) A,B என்னும் இருவகை விதைகள் முளைப்பதற்கான நிகழ்தகவுகள் முறையே$\frac{3}{4}, \frac{2}{3}$ஆகும். இரண்டு வகைகளிலும் ஒவ்வொருவிதை நடப்பட்டபோது இரண்டும் முளைப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.

14) A,Bஎன்னும் தாயங்கள் $(2A = \begin{pmatrix} 2 \\ 1 \end{pmatrix}, B = (3,2)$ஆகியவற்றினால் தரப்பட்டுள்ளன. தாயம் AB ஐக் காண்க.

15) 2a + b = 4 , a + 2b = 2எனின் சமன்பாடுகளைத் தீர்க்காமல் (a + b)இன் பெறுமானத்தைக் காண்க?


16) கீழேதரப்பட்டுள்ள முக்கோணிகளில் ஒருங்கிசையும் முக்கோணிச் சோடி எது?




17) தீர்க்க

$$(2x - 1)(x + 3) = 0$$


18) தரப்பட்டவட்டத்தின் மையம் Oஆகும்.
$R\hat{S}T$இன் பெறுமானத்தைக் காண்க





19) படத்தில் காட்டப்படும் தகவல்களைக் கொண்டு நேர்கோடுABயின்

I) வெட்டுத்துண்டைக் காண்க

II) படித்திறனைக் காண்க





20) தரப்பட்ட$\Delta ABC$ இல் $AB = AC$, $BC = 20cm$அத்துடன் $AF = 16cm$ ஆகும் எனின் நாற்பக்கல் $BCED$ இன் பரப்பளவைக் காண்க?




21) செவ்வகக் கடதாசியொன்றை மடிப்பதால் அடிப்பகுதி சமபக்க முக்கோணி ஆகுமாறு வெற்று அரியம் ஒன்று அமைக்கப்பட்டது. அரியத்தின் மேற்பரப்பளவு 540cm²உம் அதன் நீளம் 30cmஉம் ஆகும். முக்கோணமுகத்தின் ஒருபக்க நீளம் யாது?

22) O ஐ மையமாகக் கொண்ட வட்டத்திற்கு Pயில் வரையப்படும் தொடலிXYஆகும். எனின் $X\hat{P}A = 48°$ எனின் $P\hat{C}B$ பெறுமானத்தைக் காண்க.




23) $(a + b)^3 = a^3 + 3a^2b + 3ab^2 + b^3$என்பதைப் பயன்படுத்தி $(2a + b)^3$இன் பெறுமானத்தைக் காண்க.

24) P,Qஎன்ற இரு புள்ளிகளில் இருந்து சமதூரத்திலும் அதுமாறு உள்ள புள்ளி Rஇன் அமைவை ஒழுக்குதொடர்பாக அறிவினைப் பயன்படுத்தி மாதிரிப்படத்தின் மூலம் காட்டுக.

P × Q ×

25) ஒரு குறித்த வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சரியானவிடைக்கும் 1புள்ளி வழங்கப்படும். அதேவேளை ஒவ்வொரு பிழையான விடைக்கு ஒரு புள்ளி கழிக்கப்படும். 40 வினாக்களுக்கு விடை எழுதிய மாணவன் 22 புள்ளிகளை மாத்திரம் பெற்றால் இவன் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடை எழுதியிருப்பான்?

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி பழைய
மாணவர்கள் சங்கம் பிரித்தானியா.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 54

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

2019இல் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் சென்ற வாரத்திலும் அதற்கு முந்திய வாரத்திலும் வெளிவந்த அரங்கத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் I க்கான 40 வினாக்கள் தரப்பட்டிருந்தன. அவற்றுக்கான விடைகள் சென்ற வார அரங்கத்தில் தரப்பட்டிருந்தன.

அவற்றுள் 10ஆவது வினாவுக்கான விடையை 3 எனத் திருத்திக்கொள்க. தமிழ்மொழியும் இலக்கியமும் IIக்கான வினாக்களும் சென்ற வாரஅரங்கத்தில் தரப்படடிருந்தன. பயனடைந்திருப்பீர்கள் என நினைக்கின்றோம். அந்த நினைப்பில் மேலும் பயனைடவதற்காக இவ்வாரம் தமிழ்மொழியும் இலக்கியமும் IIIக்கான வினாக்களுள் முதலிரு வினாக்களைத் தருகிறோம்.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i)"பொங்கியெழுந்த கொழுங்கனலென எழுந்தார்."
(அ) கொழுங்கனலென எழுந்தவரின் பெயரைக் கூறுக.
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?

(ii) "கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு"
(அ) இந்த வரியில் யாருடைய சிறப்பு வெளிப்படுகின்றது?
(ஆ) இதில் வந்துள்ள அணி யாது?

(iii) "எனக்கு ஒண்டும் தெரியாது. நான் என்ரை டைரக்டரியில் தேடிக்கொண்டு வந்தேன்."
(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
(ஆ) 'டைரக்டரி' என்பதன் தமிழ் வடிவம் யாது?

(iv) "மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"
(அ) 'வான்கவிகள்' என்று சுட்டப்படுபவர்கள் யார்?
(ஆ) மந்திசிந்து கனிகளின் சிறப்பைக் கூறுக.

(v) "செங்கால் நாரையினம் சேர்ந்து வருமாப் போல் சினந்தருவி வெட்டும்
இளந்தாரி மாரைகண்ணூறு படாமல் காரும் ஐயனாரே"
(அ) இளந்தாரிமார் எதற்கு உவமிக்கப்படுகிறார்கள்?
(ஆ) 'கண்ணூறு' என்பதன் பொருள் யாது?

(vi) "ஐய! அன்பின் நிறைந்தாளை உரை"
(அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
(ஆ) 'அன்பின் நிறைந்தாள்' என்று சுட்டப்படுபவரின் பெயரைக் கூறுக.

(vii) "அறிவு பழுத்து அவவிடம் அறிவு தேஜஸ் சட்டெனத் தெரியும்."
(அ) 'அவவிடம்' என்பது யாரைச் சுட்டுகின்றது?
(ஆ) 'அறிவு தேஜஸ்' என்பதன் பொருள் யாது?

(viii )"அறிவு பழுத்து அவவிடம் அறிவு தேஜஸ் சட்டெனத் தெரியும்."
(அ) 'அவவிடம்' என்பது யாரைச் சுட்டுகின்றது?
(ஆ) 'அறிவு தேஜஸ்' என்பதன் பொருள் யாது?

(ix) "குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்"
(அ) இதில் வந்துள்ள உவமை அணி யாது?
(ஆ) இதில் வந்துள்ள உருவக அணி யாது?

(x) "உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்"
(அ) 'உயிர் அனையாய்' என்று விளிப்பவனின் பெயரென்ன?
(ஆ) 'உயிர் அனையாய்' என்று விளிப்பவனின் குண இயல்பொன்றைக் கூறுக.

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து,
அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை.

(அ) 'மனங்கொண்டது மாளிகை' என்னும் தொடர் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(ஆ) உப்பிலாக் கஞ்சியினை அறுசுவைபோல் நினைத்து உண்பவர்கள், எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைக் கூறுக.

(ii) சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கிக்
கொற்றத் தாரக் குரிசிலிவ ராரென்று?
குகன் வினவக் கோக்கள் வைகு
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு
மீன்றாளை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறந்த
லாற்றுறந்த பெரியா ளென்றான்.

(அ) இங்கு 'முதற்றேவி' என்று சுட்டப்படுபவளின் பெயர் என்ன?

(ஆ) முதற்றேவியின் சிறப்பொன்றைக் கூறுக.

(iii) விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவையில்
முறையிடு நாள் வெகுளேலென்று
மரபினுக்கும் நமக்கும் உலகுள்ள அளவும்
தீராத வசையே கண்டாய்
எரிதழல் கானகம் அகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்
அரவுயர்த்தோன் கொடுமையிலும் முரசுயர்ந்தோய்
உனது அருளுக்கு அஞ்சினேனே.

(அ) 'வேத்தவை' என்பதன் பொருள் யாது?

(ஆ) 'உனது அருளுக்கு அஞ்சினேனே' என்று கூறுவதில் வெளிப்படும்
சுவை யாது?

(iv) சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் படத்தொகுப்பு தனித்தனியாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப் படிமங்களும்
ஒலிப்பதிவுகளும் ஓர் அர்த்தமுள்ள கோவையாக அமைக்கப்படுவது.
இதைச் சினிமா இலக்கணத்துக்கு அடித்தளம் எனலாம். எப்படி இந்தக்
கோவை அமைகிறதோ அந்த விதத்திலேயே அந்த நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும். காட்சிப் படிமங்களைத் தொடுக்கும் வரிசையைப் பொறுத்து அர்த்தம் மாறுகிறது.

(அ) அர்த்தமுள்ள கோவையாக அமைக்கப்படுபவை எவை?

(ஆ) அவ்வாறு அமைக்கப்படுவதைச் சினிமா மொழியில் எவ்வாறு குறிப்பிடுவர்?

(iv) புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு. கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது. "விலகு பிள்ளை" என்று
வழக்கமாகச் செல்லுவதைச் சொல்லுமுன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடம்கொடுத்தார். நாவலர் அவர்களின் நிலை –
கம்பீரமான தோற்றம் – வீறுகொண்ட பார்வை – எண்ணங்களின் வேகம் - இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை" என்றார் நாவலர் அவர்கள். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

(அ) "புலவர்களுடைய பாட்டுக்களில் அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு." – இங்கு, 'அவர்கள்' என்று சுட்டப்படுபவர்கள் யார்?

(ஆ) நாவலரின் சிறப்புக்கள்பற்றிக் கூறப்படுவனவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் பிரித்தானியா.

தொடர்ச்சி...

## அரங்கம்:......

அரங்கம் சந்தித்த சவால்களும்அதிகம். இலவச இதழான அரங்கத்துக்கு விளம்பரதாரர்களை சம்பாதித்துக் கொள்ளும் விடயத்தில் அரங்கத்தின் ஆசிரியர் முகங்கொடுத்த இடர்ப்பாடுகள் பெரிதும் வெளியே பேசப்படாதவை. ஐநூறு பேர்கிள்ளி க்கொடுத்தால் மலையைப் பிளக்க முடியும். ஆனால் ஓரிருவர் அள்ளிக் கொடுப்பதில்தான் இன்று வரை மலைகள் பிளக்கப்படுகின்றன. வரலாற்றின் மகத்தான பக்கங்கள் அப்படி எழுதப்பட்டவைதான். அரங்கம் இன்னொருமலை பிளந்தெழுந்த விருட்சம்.

தனிப்பட்ட ரீதியில் அரங்கத்துக்கு நான்பலவிதங்களில் கடப்பாடு கொண்டவன். ஒரு கட்டுரையாளனாக, எழுத்தாளனாக, என் எழுத்தை மெருகூட்டவும், ஆய்வுப்பாணியை வளப்படுத்தவும் அரங்கம் எனக்கு உதவியிருக்கிறது. பழைய மட்டக்களப்பு நாடு பற்றிய காலனித்துவகால குறிப்புகள் இதுவரையாராலும் பெரிதாகப் பேசப்பட்டதில்லை. எனவே அவற்றைமையமாக வைத்து எழுதப்பட்ட அரங்கக் கட்டுரைகள் பலராலும் பாராட்டப்பட்டிருக்கின்றன. அரங்கம் சம்பாதித்துத் தந்த வாசகசொந்தங்கள் அனேகம். அரங்கத்தின் வாசக அன்பரான புத்தளத்தைச் சேர்ந்த இஸ்தார் அவர்கள் இன்றும் தொடர்பில் இருக்கிறார். அறிஞர்கள், பெரியவர்களுக்கு அரங்கத்தை விநியோகிக்கும் சாக்கில், அவர்களுடனான நெருக்கத்தையும் மேம்படுத்திக் கொள்ள முடிந்தது. இப்படி அரங்கம் எனக்குத்தந்தவை பல.

குறிப்பிட்ட வாரம் எழுத ஒன்றுமே கிடைக்கவில்லை என்றாலும், சீவகன் ஐயாவின் அன்புத் தொல்லை காரணமாக சிலகட்டுரைகளை எழுதியிருக்கிறேன். அப்படி அவசரமாக எழுதப்பட்ட பலகட்டுரைகள் மிகச்சிறப்பாக வந்திருக்கின்றன. அவரது ஊக்குவிப்பாலும் அன்பான நிர்ப்பந்தத்தாலும் எழுதப்பட்ட கிழக்கிலங்கை வரலாறு, பண்பாடு தொடர்பான சிலகட்டுரைகள் அவற்றின் உள்ளடக்கத்தாலும், புதுமையாலும் என்னையே கர்வம் கொள்ள வைத்தவை. என்றேனும் ஒருநாள்அவை கிழக்கிலங்கை வரலாற்றில் பேசப்படுமானால், அதற்குரிய முழு கௌரவமும் பாராட்டும் அரங்கம் இதழுக்கே போய்ச் சேரவேண்டும்.

இலவசம், தரம், இன்றியமையாமை மு தலான சிறப்பம்சங்களுடன் வீறுநடை போட்ட அரங்கத்துக்கு எது நடக்கக்கூடாது என்று அஞ்சினேனோ அது நடந்து விட்டது. வாசிப்பை நேசிப்பவர்களுக்குத் தெரியும். ஒருபத்திரிகையை இழப்பதென்பது ஒரு நல்ல நண்பனை இழப்பதைப்போல. அச்சுப்பதிப்பு நின்றுவிட்டாலும் இணையத்தில் அரங்கம் தொடர்ந்து இயங்கும் என்றசெய்தி ஓரளவு ஆறுதல் அளிக்கிறது. அது விட்டுச்செல்லும் இடைவெளியை இனியார் நிரப்புவது என்பது பெரியகேள்வி. காலத்திடம் பதில் இருக்கும் என்று ஆறுதல் பட்டுக்கொள்ள வேண்டியதுதான். அரங்கத்துக்கு ஒரு நண்பனின் பிரியாவிடைகளும் அன்பும்.

தொடர்ச்சி...

## கிழக்கின் கால்...

உருவாகுவதைத் தவிர்க்க முடியாதிருந்த போதிலும் புதிய சங்கங்களின் உருவாக்கத்தினால் தமிழ், முஸ்லீம் கழகங்களுக்கிடையிலான உறவுகளும் தொடர்புகளும் அறுந்துவிடக் கூடாது என்பதில் அக்கறை செலுத்தியவர். இதன்காரணமாக காத்தான்குடி லீக்கினால் நடத்தப்படும் அழைப்புச் சுற்றுப்போட்டிகளில் வருடாந்தம் மட்டக்களப்பு கால்பந்தாட்டச் சங்கத்தின் கழகங்கள் பங்குபற்றித் தமது உறவினைத் தொடரச் செய்வதில் அதிக கவனஞ் செலுத்தியவர்.

கிழக்கில் தமிழ் முஸ்லீம் சமூகங்களின் நல்லுறவில் கால்பந்தாட்டம் மிகமுக்கியமான பங்களிப்பை வழங்கி வந்துள்ளதாகவும் அதன் ஒரு விளைவாகத் தான் உள்ளதாகவும் தன்னை வளர்த்துவிட்டது மட்டக்களப்பு கால்பந்தாட்டச் சங்கமே என அடிக்கடி கூறுவார்.2019 ஏப்பிரல் 21 தாக்குதல் சம்பவத்தால் மிகவும் மனம்நொந்து இத்துயரமான அனுபவங்களிலிருந்து மீண்டு எழுவதற்கு கால்பந்தாட்டத்தினூடாக எப்படிச் செயலாற்றலாம் என எம்மோடு கதைத்திருந்தார். இதன் ஓரம்சமாகவே அண்மையில் காத்தான்குடியில் மின்னொளியில் தமிழ் முஸ்லீம் கழகங்கள் பங்குகொண்ட மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்பந்தாட்ட வீரர்களால் பாறுக் நானா, பாறுக் அண்ணா எனப் பாசத்தோடு அழைக்கப்படும் இவர், இன, மத வேறுபாடுகளைக் கடந்து மட்டுநகர் கால்பந்தாட்ட வீரர்களின் இல்லங்களில் நிகழும் வைபவங்களில் வந்து பங்குபற்றும் வேற்றுமைகளுள் ஒற்றுமை காணும் ஓர் ஆக்கபூர்வமான மனிதனாக வாழ்ந்தவர்.

சிறந்ததொரு அறிவிப்பாளர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக உரையாற்றும் மொழிவளங் கொண்டவர். மட்டக்களப்பில் நடைபெற்ற பல விழாக்களிலும் வைபவங்களிலும் அறிவிப்பாளராகப் பங்குபற்றி வருபவர். இத்தகைய சிறந்த ஆளுமையின் திடீர் மரணம் முஸ்லீம், தமிழ் சமூகங்களுக்கு ஒரு பேரிழப்பாகவே உள்ளது. குறிப்பாக தமிழ் முஸ்லீம் சமூகங்களிடையே நல்லுறவுடன் வாழ்ந்த ஓர் உதாரணரின் இழப்பாகவே அமைந்துள்ளது. அன்னாரின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தரும் படிப்பினைகளுடன் அவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக நமது அஞ்சலிகளைச் செலுத்துவோம்.

தொடர்ச்சி...

## இயங்கும் சக்....

சோர்ந்தும் இருந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் இது பற்றி ஒரு உள் மட்டக் கலந்துரையாடல் நடத் தி நெருக்கமானவர்களுக்குத் தன்னிலை விளக்கினார்.

எனினும் அரங்கம் தொடர்ந்து வந்தது.

சென்ற வாரம் லண்டனில் இருந்து போன் பண்ணி, அதனை அச்சில் கொணரும் முயற்சியை நிறுத்தி விடப்போவதாகக் கூறினார். இது சிரமான காரியம் என நான் முன்னரேயே எண்ணியமை எனக்கு ஞாபகம் வந்தது. கொஞ்ச காலம்தான் அரங்கம் மட்டக்களப்பில் வெளிவந்த தாயினும் அது பெரியர்தோர் தாக்கத்தை இங்கு ஏற்படுத்தியுள்ளது என்பதில் மாற்றுகருத்துகளில்லை. மட்டக்களப்பின் அரசியல், சமூகம் பிரச்சனைகள் மக்கள் தேவைகள், பண்பாடு, இன ஒற்றுமை அதன் பன்முகத் தன்மை என்பன பற்றியெல்லாம் அரங்கம் பேசியது. பக்கசார்பின்றிப் பேசியது. ஓர் விழிப்புணர்வை வாசகரிடம் ஏற்படுத்தியது.அது கிராமபுறங்களுக்கும் சென்றது. இளம் சிறார்களை விளையாட்டுகளில் ஊக்கபடுத்தியது. அரங்க வாசகர் தொகை கூடியது, இலவசமல்லவா! ஏன் இவர் இதனைச் செய்கிறார் என்ற கேள்வியும் எழாமல் இல்லை. எலக்சனுக்கு அடித்தளமிடுகிறாரோ என ஐயுற்றவர் பலர். அவருக்கு எதிர்க்கருத்துகளும் எழுந்தன. எனினும் இவை அனைத்தையும் தாங்கி சீவகன் இயங்கினார். அவருக்கு அவர் மனைவி பரமேஸ்வரியும் நண்பர்களும் முகமறியாதோரும் பலம் தந்தனர்.

அவர் சோர்ந்தபோது உற்சாகமளித்தனர். எனினும் அவர் சோர்ந்தே போனார் சோர்ந்தே போனாரா. நான் அறிந்த சீவகன் சோரா உழைப்பாளி.
அரங்கம் தொடர்ந்து அச்சில் வராவிடினும் கணியில் வெளிவரும் என்று என்னிடம் கூறினார். இன்று எலக்ட்றோணிக் யுகம் அதனையும் நாம் வசப்படுத்துவோம், நாமும் தொடர்ந்து எழுதுவோம்.
சிலவேளை அது மீண்டும் அச்சாகவும் வரக்கூடும்.
இயங்கும் சக்திகளை யாரலும் நிறுத்த முடியாது. அவை இயங்கிக்கொண்டேயிருக்கும். வடிவங்கள்மாறலாம், ஆனால் இயக்கம் நடந்துகொண்டேயிருக்கும்.

சீவகனும் அவர் மனைவியும் என்றும் இயங்கும் சக்தியின் இருபெரும் பிரதிநிதிகள்.

தொடர்ச்சி...

## சொல்லத் ...

செயற்பாடுகள் அதாவது மரபுவழி அரசியலிருந்து விடுபட்டு சமூகமாற்ற அரசியலுக்கான அறிவுபூர்வமான செயற்பாடுகள் இன்னும் காத்திரமாக முன்னெடுக்கப்படவில்லை அதனாலேயே தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தவறான வழிநடத்தலின் பின் மக்கள் வழமைபோல பழக்கதோசத்தில் கண்ணை மூடிக்கொண்டு நடந்திருக்கின்றார்கள்.

எனினும் எதிர்காலத்தில் கிழக்கிலே மாற்று அரசியலுக்காகச் செயற்படுகின்ற அரசியற் கட்சிகள் எல்லாம் ஒருகுடையின் கீழ் ஐக்கியப்பட வேண்டிய அவசியத்தையும், கிழக்குத் தமிழர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிடியிலிருந்து முற்றாக விடுவிப்பதற்கான தேவைப்பாட்டையும் கூட இத்தேர்தல் முடிவுகள் வலியுறுத்தியுள்ளன.

புல்லை வைத்துக்கொண்டு எவ்வாறு வயலில் நெல்லை விதைக்க முடியாதோ அதுபோலவே, கிழக்குத் தமிழர்களின் சமூக பொருளாதார நலன்களின் மீது அக்கறைப்படாது முழுக்க முழுக்கப் பாராளுமன்றப் பதவி சுகத்தையே நோக்கமாகக் கொண்ட 'வாக்குப்பெட்டி '

அரசியலை நோக்கியே மக்களை அழைத்துச் செல்லும் பிற்போக்குச் சிந்தனைகளை வரித்துக்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண அரசியல் அரங்கிலிருந்து முற்றாக நிராகரிக்கப்படும்வரை கிழக்குத் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை என்கின்ற யதார்த்தைப் புரிந்துகொண்டு, அதற்கான மாற்று வேலைத் திட்டங்களுடன் கிழக்கின் மாற்று அரசியல் சிந்தனையாளர்கள், கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள், தொழிசார் தகைமையாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளிகள், வர்த்தகர்கள், ஆன்மீகவாதிகள், கலைஞர்கள், கலை இலக்கிய, சமூகசெயற்பாட்டார்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலதரப்பட்டோரும் ஓரணியில் திரண்டு ஓர் 'அரசியல் சக்தி'யாக மேற்கிளம்ப வேண்டிய தேவையை இந்த ஜனாதிபதித் தேர்தலின் கிழக்கு மாகாண வாக்களிப்பு விரைவுபடுத்தியுள்ளது.

தொடர்ச்சி...

## அரங்கம்' மட்டு....

அப்பால் மேலும் பல பணிகளை ஆற்றியுள்ளது.

#அரங்கம் FM வானொலி ஒன்றை மட்டக்களப்பில் நடத்தியது.

# மட்டக்கப்பிலும் வடகிழக்கிலும் நடந்த படுகொலைகள் பலவற்றை ஆவணப்படுத்தி காணொளியாக தயாரித்துள்ளது.

#பெண்களுக்கான உதைபந்தாட்ட சமர் ஒன்றை நடத்தி, இரு பாடசாலை பெண்கள் உதைபந்தாட்ட அணிகளை பொறுப்பெடுத்து இன்றுவரை பயிற்சியும் போசாக்குணவும் வழங்கி பராமரித்து வருகின்றது.

# “கா” கலை இலக்கிய வட்டத்துடன் இணைந்து பல படைப்பாளிகளின் நூல்களை அரங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தியுள்ளது.

# இலங்கைக்கு வருகை தரும் பல முக்கியமானவர்களை மட்டு மண்ணுக்கு அழைத்து பல கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

இவ்வாறு சமூகம் சார்ந்து அரங்கத்தினூடாக சீவகன் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டார். அது தோற்று விட்டது போல தோற்றம் கொண்டாலும் காலம் அதனை சரியாக பதிவு செய்து கொள்ளும்.

அரங்கத்தில் எழுதிய படைப்பாளிகளை சிலரை யார் என தேடியோர் பலர் உள்ளனர். காரணம் அவர்களின் படைப்புக்கள் பலரை ஈர்த்துக் கொண்டதே ஆகும்.

அரங்கம் இன்னும் நீடித்து இருக்குமாயின் மட்டக்களப்பின் இன்னும் பல பிரச்சினைகளையும் விடயங்களையும் கூர்மையாக பேசியிருக்கும் என்று நம்புகிறேன்.

அரங்கத்தின் இக்கால ஓட்டத்தில் நானும் பங்கெடுத்தேன் என்பதில் பெருமை கொள்கின்றேன்.

எனினும் மட்டக்களப்பின் பத்திரிகைக்கான இடைவெளி மீண்டும் ஏற்பட்டு விட்டது....

அதனை நிரப்ப வேண்டியது யாருடைய பொறுப்பு?....
மட்டக்களப்பானுடைய கடமை.
ஆனால் வக்கணைகள் கதைத்து, காலத்தை ஓட்ட வேண்டியதே நமது கடமை.

நமக்கானதொன்றையும் நாம் அமைக்க மாட்டோம், யாராவது எங்கிருந்தோ வர வேண்டும்.

அதற்காகவே ஆலாய்ப் பறந்து கொண்டிருப்போம்.

வாழ்த்துக்கள்.

# அக்கினி புலையவெளி

## உணவு உற்பத்திப் பொருட்கள்

**சைவ முறையில் தயாரிக்கப்பட்டது**

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல:- 0771516203**

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Published by Arangam News (Pvt) No 196,Trinco Road, Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd